திருவள்ளுவர் ஆண்டு 2040

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 103 பகுதி : 5 | மே- 09 | விலை ரூ. 10/-

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

வானம் ஒரு வகுப்பறை

கவிவேந்தர் கா.வேழவேந்தன்

நான்குசுவர் அறைச்சிறையை உடைத்துக் கொண்டு
நடுவீதி வாருங்கள்; வியப்பில் ஆழ்ந்தும்
வானமெனும் வகுப்பறையில் நுழைவீர்! கீழ்வான்
வண்ணமயப் பொன்தகடாய் ஒளிரக் காண்பீர்!
சேனையெலாம் தேரேறி நடத்தல் போலே
திசையெட்டும் முகிற்கூட்டம் கடலி னின்றே
ஆனமட்டும் நீர்மொண்டு பறக்கும்; ஆமாம்
அம்மேகம் இலையென்றால் உயிர்கள் ஏது?
மண்ணின்றேல் பயிரில்லை; உண்மை; ஆனால்
மண்விதையின் கண்விழிக்க மழைநீர் வேண்டும்!
அண்ணாந்தே மரஞ்செடிகள் வானை நோக்கி
அரியதவம் புரிவதுமேன்? அதற்கே யன்றோ?
விண்மீன்கள் கண்சிமிட்டிக் கொட்டக் கொட்ட
விழித்திருக்கும் காரணமேன்? தங்கத் தட்டாய்
வெண்ணிலவும் மின்னுவதால் சுயந லத்து
வெறிக்கும்பல் சுருட்டிவிடும் என்ப தால்தான்!
நொடிக்குநொடி புதுக்கவிதை தீட்டிக் காட்டும்
நுண்மாயத் திரையென்றால் வானந்தானே!
பருவான மலைவாயிற் குழம்பில் ஓடிப்
பரிதிமகன் குளிப்பதுமேன்? நெருப்புத் தேகக்
கடும்வெப்பம் தணிப்பதற்கே! அதற்குப் பின்னர்
காரிருளை விரிப்பதுமேன்? உழைத்த மக்கள்
நெடுந்துயிலில் மூழ்கிடவே என்பேன்! சொன்னால்
நீள்வான வகுப்பறையின் புதிரும் ஒன்றா?

செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 103
பகுதி : 5
மே 2009

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2040

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 100	ரூ. 600
புரவலர் கட்டணம்	ரூ. 1000	ரூ. 2000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 10	

முகவை மன்னர் **நா.குமரன் சேதுபதி**
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

ஆசிரியர்

இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

பொருளடக்கம்

இதழ்மணம்	3
தமிழ் வளர்த்த தந்தையும் மைந்தரும் பெரும்புலவர், மதுரைத்தமிழ்ச் சங்கச் சான்றோர் இரா.இளங்குமரன்	4
தமிழ் ஓர் உயர்தனிச்செம்மொழி சென்ற இதழ்த் தொடர்ச்சி. தோ. சி. தங்கபாண்டியன்	9
குறுந்தொகை விளக்கும் தலைமக்களுக்கு இடையில் உள்ள உறவுகள் த. செந்தமிழ்ச் செல்வன்	13
இலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகள் முனைவர் சு.குழந்தைவேல் பன்னீர்செல்வம்	17
ஒருவன் ஒருத்தி க.தண்டபாணி	22
திருக்குறளில் காணும் தொடரியல் புதுமைகள் டாக்டர் பொற்கோ	24
தீபாவளியும் கார்த்திகையும் – ஒரு வரலாற்றுப் பார்வை – முனைவர் அ.தட்சிணாமூர்த்தி	30
சங்ககாலப் பலகணி முனைவர் அ.அறிவொளி	39
கற்கை நன்றே கணபதி பிச்சை	41

இதழ்மணம்

அன்புடையீர்,

குடமுழுக்கு விழா கண்ட மீனாட்சியன்னையின் திருவருளோடு செந்தமிழ் இதழ் மலர்ந்து மணம் பரப்புகிறது.

தொடர்ந்த எழுத்துப்பணியால் தமிழில் ஆழ்ந்த தொன்மையையும் சிறப்பையும் வெளிப்படுத்திவரும் பெரும்புலவர் இரா.இளங்குமரனார், தமிழை வளர்த்த சான்றோர்களால் தமிழுக்குச் செய்த சீரிய பணியினைத் தம் கட்டுரைவாயிலாக வெளிப்படுத்தி வருவது போற்றற்குரியது.

தான் சிறப்புற வாழ்தலோடு, தன்னை அண்டிவருபவரையும் வாழவைத்தலே முதன்மைப் பண்பு. தமிழ்மொழியும் முன்னைப் பழமைக்குப் பழமையாகவும் பின்னைப் புதுமைக்குப் புதுமையாகவும் திகழ்தலோடு தன் சேய்மொழிகளையும் வளர்த்துவரும் தமிழ் ஓர் உயர்தனிச் செம்மொழியே! இதனை, தோ.சி.தங்கபாண்டியனின் கட்டுரை வலியுறுத்தியுள்ளது.

குறுந்தொகை இலக்கியம் வாயிலாக அன்பினால் கலந்த தலைமக்களின் இணைந்த வாழ்வினை த.செந்தமிழ்ச்செல்வன் காட்சிப்படுத்தியுள்ளார்.

தமிழ்க்கவிதைகளில் அறிவியல் சிந்தனைகள் பதிவு செய்யப்பட்டுள்ளமையைப் புலவர் சு.குழந்தைவேல் பன்னீர்செல்வத்தின் கட்டுரை தெளிவாக எடுத்துரைக்கிறது.

இலக்கண விதியை வள்ளுவர் முறையாகப் பின்பற்றியமையை, 'ஒருவன்–ஒருத்தி' என்னும் கட்டுரையும், புதுமையைப் புகுத்தியுள்ளமையை திருக்குறளில் காணும் தொடரியல் புதுமைகள் என்னும் கட்டுரையும் சான்றுகளோடு நிறுவியுள்ளது.

ஒளியோடு தொடர்புடைய தீபாவளியும் கார்த்திகையும் ஒரே விழாவே என்பதை வரலாற்றுப் பார்வையில் முனைவர் சு.தட்சிணாமூர்த்தி விளக்கியமை சிறப்பிற்குரியதாக அமைந்துள்ளது.

சங்ககால முன்னோர்களின் செம்மையை முனைவர் அ.அறிவொளி சங்ககாலப் பலகணி வாயிலாகக் கண்டு, உரைத்து இதழை நிறைவுபடுத்தியுள்ளார்.

தமிழோடு இணைந்து நாமும் வாழ்வோம்; வளர்வோம்.

–முனைவர் கு.சின்னப்பா

தமிழ் வளர்த்த தந்தையும் மைந்தரும்

பெரும்புலவர், மதுரைத்தமிழ்ச் சங்கச் சான்றோர்
இரா.இளங்குமரன்

இராமநாதபுரம் சமஸ்தானம் பொன்னுசாமித் தேவர் வேண்டுகோளின்படி, யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரால் பல பிரதி ஏடுகளைக் கொண்டு பரிசோதித்து வெளியிட்ட பதிப்பு இது (திருக்குறள் – பரிமேலழகர் உரை)

சென்னை பட்டணம் வாணி நிகேதனவச்சுக்கூடத்தில் துன்மதி ஸ்ரீ வைகாசி மாதம் பதிப்பிக்கப்பட்டது. (கி.பி.1861) இதன் இரண்டாம் பதிப்பு யுவ ஸ்ரீ ஆடி மாதம் வெளியானது (1875).

இப்பதிப்பில் மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, அவர் மாணவர்கள் சி.தியாகராச செட்டியார், ச.தெய்வநாயகம் பிள்ளை, சோடசாவதானம் வீ.சுப்பராயச் செட்டியார் ஆகியவர்கள் இயற்றிய சிறப்புப் பாயிரச் செய்யுள்கள் உள்ளன.

ஒவ்வொரு பக்கத்தின் தலைப்பிலும் பக்க எண், அதிகார எண், அதிகாரப் பெயர் ஆகியவை அடங்கியுள்ளன. குறளுக்குத் தொடர் எண் கொடுக்கப்பட்டுள்ளது. அது அவ்வக்குறளின் முன்னே கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வக்குறளின் இரண்டாம் அடி இறுதியிலும் அக்குறளின் உரை முடிவிலுமாக இரண்டு இடங்களிலும் அவ்வதிகாரத்தில் அஃது எத்தனையாவது குறள் என்பது குறிப்பிடப்பட்டுள்ளன. பயன்படுத்தப்பட்டுள்ள எண்கள் எல்லாமும் தமிழ் எண்களே! நாவலர் பதிப்புமாண்பு நூலில் நன்கு வெளிப்படுகின்றது. அடிக்குறிப்பு, பாலியலதிகார அகராதிகள், திருக்குறளகராதி என்பவற்றை நோக்க நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட பதிப்பு என்னும் எண்ணமே எழுவது இல்லை.

திருக்குறள் சிவனிய ஆசிரியர்களால் எடுத்தாளப்படும் இடங்களில் இவ்வருமைத் திருக்குறள் என்னும் வாய்ப்பாட்டிலேயே சுட்டுகிறார் நாவலர்.

(எ.டு) ௩சஅ, ௩ருகூ, ௩சூ௨

எந்நன்றி கொன்றார்க்கும் என்னும் குறளுரையில் பரிமேலழகர், பெரிய அறங்களைச் சிதைத்தலாவது ஆன்முலை அறுத்தலும் மகளிர் கருவினைச் சிதைத்தலும் பார்ப்பார்த்தபுத்தலும் முதலிய பாதகங்களைச் செய்தல் என்பதன் அடிக்குறிப்பாக, நாவலர்,

"ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வருவாய் மருங்கில் கழுவாயு முளவே"

என்னும் பாடத்தைக் காட்டியது. ஏட்டொடு ஒப்பிட்டு உண்மை காட்டியதாம். (புறம்.௩௪.)

இவ்வருமையான பதிப்பில் உள்ள சிறப்புப் பாயிரங்கள் நான்கில் மீனாட்சி சுந்தரர் பாடல்கள் முதற்கண் உள. அறுசீர் விருத்தங்கள் பதினைந்து. அதில் பொன்னுசாமித் தேவர் பற்றியவை எட்டு. ஆறுமுக நாவலரைத் திருக்குறள் பதிப்புச் செய்து தர, ஏன் வேண்டினார்? அதன்முன், திருத்தணிகை சரவணப் பெருமாள் ஐயர் வேதகிரி முதலியார் (1830, 1856) வெளியிட்ட திருக்குறள் பதிப்புகள் உள்ளன. அவை பரிமேலழகர் உரையல்ல. பரிமேலழகர் உரையைச் சுருக்கி வெளிப்படையாக்கிப் பதவுரையும் தாற்பரியவுரையுமாகச் செய்யப்பட்டதும்", திருவள்ளுவர் என்கிற திருக்குறள் மூலமும் தெளிபொருள் விளக்கம் என்கிற அதன் உரையும் கருத்துரையும் நிறைவேறின என்பதுமாம்.

ஆதலால் பரிமேலழகர் உரை முழுமையாக ஆறுமுகநாவலர் பதிப்புக்கு முன் வெளிவந்திலது என்பதால், அதனை வெளியிட அமைச்சர் பொன்னுசாமி விரும்பினார். அரண்மனையிலேயே அவர் திருக்குறள் வகுப்பு நடத்துதலும் ஆராய்தலும் செய்தவர். அவர் பொன்னுசாமித் தேவரைப் பற்றிக்கூறும் பாடல்கள் சில:

"ஏட்டுவரைந்து எடுத்துணர்ந்து வருநாளில்
எங்கணும்சால் எழுத்துக் குற்றம்
ஓட்டுவகை உணராராய்ப் பரம்பரையொன்

றேகருதி ஒழிந்தார்; அத்தோம்
மாட்டுவலென் றுணர்ந்தனைய மூலமும்பே
ருரையுமுனம் வகுத்த வாறே
தீட்டுதலி லாவெழுத்தில் கிளவியென
உலகுபுகழ், செம்பி நாடன்

ஓதுபதி யாயவிரா மீசர்திரு
வருளான்நீர் உடுத்த வைப்பில்
கோதுபதி யாதகல அறந்தழைந்து
விளங்கிடச் செங் கோல்கைக் கொண்ட
சேதுபதி மானேசர் அதிகார
நடாத்துசெய சிங்கம் செம்பூ
மாதுபதி யயாவுயிர்ப்ப உலகமுழு
வதும்புரக்கும் வள்ளல் கோமான்

சிவஞானத் தேவர்வரப் பிரசாத
பாலனருள் செறிபூ பாலன்
பவஞான முழுதொழியக் கோபாலன்
எஞ்ஞான்றும் பணிகா பாலன்
தவஞான நீற்றொளியே யொளிர் பாலன்
பகைகாணத் தகாப்பின் பாலன்
அவஞான மறுத்துணர்ந்த முப்பாலன்
போர்வையென அமைசீர்ப் பாலன்

ஒருகாவித் துவசத்தான் ஒளிர்தவை
மாலிகையாள் உணர்வான் மீக்கூர்ந்து
அருகாவித் துவசத்தான் ஆன்றபெருஞ்
சிவஞான மடங்க உய்க்கும்
ஒருகாவித் துவசத்தான் பகைநோக்கி
யுறாமனமே கடைகா துஞ்சா
துருகாவித் துவசத்தான் புணர்யான்செய்
காயமென உரைக்கும் வாளான்

தரைசெய்த வப்பயனா கியமைந்தபெரு
வளப்புதுவைத் தலைமை யோன்பொன்
வரைசெய்நிதிப் பெருவாழ்க்கை மாகனவான்
பெரும்புலவர் மறவா தென்றும்
உரைசெய் பெரும்புகழ்ப் பொன்னுச்சாமி நரேந்திரன்
மகிழ்கூர்ந் துரைப்பக் கேட்டு
நரைசெய் விடையேறுயர்த்த தம்பிரான்
அடிக்கன்பே நயக்கு நல்லோன்

மன்னுபெருந் தமிழ்ப்பாடை இலக்கணமே
இலக்கியமே வரம்பு கண்டோன்
பான்னுசிவ புராணங்கள் பலதெரிந்தோன்
சிவாகமநூற் பரவைமூழ்கி
உன்னுமனு பூதியெனும் விலைவரம்
பிலாமணிகை யுறக்கொண் டுள்ளான்
இன்னுநய குணத்தினனாய்ச் சைவமெனும்
பயிர்வளர்க்கும் எழிலி போல்வாள்

நீடுபுகழ்த் திருக்கேதீச் சரந்திருக்கோ
ணாசலமிந் நிலவா நின்ற
நாடுபுகழ்த் தலம்பொலியாழ்ப் பாணத்து
நல்லூர்வாழ் நகராக் கொண்டோன்
தேடுபுகழ் உருவமைந்த கந்தவேள்
தவத்துதித்த செல்வன் யாரும்
பாடுபுகழ் ஆறுமுக நாவலனவ்
வாறச்சில் பதிப்பித் தானே"

என்னும் பாடல்களில் பதிப்பிக்க நேர்ந்த நிலை, பதிப்பிக்கத் தூண்டியவர் பெருமை, பதிப்பித்தவர் அருமை என்பவற்றை விரித்துரைக்கிறார். சிறப்புப் பாயிரப் பாடல்கள் நான்கையும் விரைந்து உரையும் தந்தால்—தனி நூலாகிவிடும் என்பதால் இவ்வேழு பாடல்கள் அளவில் அமைவோம்! எழுசீர்க்குறள்! ஏழுகடலனைய குறளுக்குக் கடுகும் அணுவும் உவமையாகக் காட்டப்படவில்லையா? அன்றியும் புல்நுனிநீரும், மலைமுழுதுறக்காட்டும் சிறிய ஆடியும் காட்டப்பட்டவை தாமே!

ஏட்டிலே உள்ள பிழைகள் எத்தனை எத்தனையோ? இவை சரியானவையே என்று கொண்டு விட்ட நிலைமை! பிழையில்லாமல் அச்சிட வேண்டும்; நாட்டுக்கு அக்கொடை புரிவது தலைமையானது என நினைந்தான் ஒரு பெருமகன்! அவன் சேதுநாட்டு அமைச்சன்; முழுமுதல் இறைமை வழிபாட்டாளன்; குற்றம் என்பது சிறிதும் நெருங்காத குணத்தான்; சிவஞானத்தேவர் செய்தவத்தால் பிறந்தான்; பகைவர் நெருங்கா வீறுமிக்கான்; பொய்யுணர்வு அகற்றி மெய்யுணர்வில் மேலோங்கச் செய்யும் திருக்குறளை முழுதுற ஆய்ந்தான்; காவிக் கொடியுடையவன்; முல்லை மாலை அணிந்தவன்; சிவஞானப்போற்றாளன்; மீளப் பிறப்பில்லா மேலோன்; பெருஞ்செல்வ வாழ்வன்; புலமையர் போற்றும் புகழ் இருக்கையன் பொன்னுசாமி என்பான்.

அவன், சிவனடிமறவாச் சிந்தையனும், தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்று எல்லை கண்டவனும், சிவபுராணங்கள் சிவாகமங்கள் என்னும் கடலில் மூழ்கிக் கண்டவனும்; எவரும் விரும்பும் குணத்தினனும், சைவம் என்னும் பயிர்க்கு வான்மழை போல்வனும், சிவத்தலங்கள் எல்லாம் சென்று வழிபாடு செய்தவனும், யாழ்ப்பாணம் சார்ந்த நல்லூர் என்னும் ஊர் விளங்கத்தோன்றிய தோன்றலும், கந்தப்ப பிள்ளை என்பார் பெற்ற மைந்தனும் ஆகிய ஆறுமுக நாவலனை நயந்து வேண்டிக் கொள்ள,அவன் அவ்வாறே அச்சில் பதிப்பித்தான் என்பது இப்பாடல்களின் திரட்டுப் பொருளாம்.

திருக்குறள் செவ்விய பதிப்புக்கு மூலவர் பழந்தமிழ்ப்பதிப்புக்குக் கால்கோள் செய்தவர் ஆறுமுக நாவலர் என்றால், அத்திருப்பணியைச் செய்து முடிக்கத் தூண்டித் துவக்கியர் தமிழ்ச்சங்கம் தோற்றுவித்த பாண்டித்துரையாரின் தந்தை முகவை அமைச்சர் பொன்னுசாமித் தேவரே ஆவர் என்க.

தமிழ் ஓர் உயர்தனிச்செம்மொழி

சென்ற இதழ்த் தொடர்ச்சி... தோ. சி. தங்கபாண்டியன்

தற்கால இந்தியா முழுமையும் வழங்கிய மொழி தமிழ்: சமஸ்கிருத, பிராகிருத சம்பந்தமான மொழிகள் வழங்கவில்லை. இவ்வுண்மையை பி.தி.சீனிவாச ஐயங்கார், "இந்தியாவின் கற்காலம்" என்னும் நூலில் விளக்கியுள்ளார் எனவும், ந.சி.கந்தையா என்னும் தமிழறிஞர் கூறுவது தமிழின் பழமையை உணர்த்துவதாக உள்ளது (பக் 20–21)

"கி.மு.50,000 ஆண்டுகள் ஒட்டிச் செம்மையான தமிழ் இருந்து வந்திருக்கிறது" (தமிழும் மொழிகளும் ப.11) 'உலகில் உள்ள மொழிகள் 2700 ஆகும். இவற்றில் இலக்கண இலக்கியம் கொண்டவை 700 மொழிகளுக்கு மேல் தேறாது. சொந்த எழுத்துக்களைக் கொண்ட மொழி என்றால் எண்ணிக்கை 500க்குக் கீழ் வந்துவிடும். இந்நிலையில் தொன்மையான மொழி என்ற வகையில் தமிழ், சமஸ்கிருதம், சீனம், இலத்தீன், கிரேக்கம் ஆகிய ஐந்து மொழிகளைச் சொல்வர். வேறு சிலரோ ஹீப்ரு மொழியைச் சேர்ந்து 6 மொழி என்பர். ஆனால் இவற்றில் சமஸ்கிருதத்திற்கு இன்றளவும் எழுத்தில்லை. எழுத்தில்லாத மொழி எங்ஙனம் இலக்கியம் படைக்கும்? எங்ஙனம் இலக்கணம் உருவாக்கும்? எனவே என்றுமே பேசப்படவில்லை என்பதால் முதன்மைப் போட்டிக்குத் தகுதியற்றதாகிவிடுகிறது. சீனமொழி எழுத்துக்காலத்திலேயே நின்றுவிட்டது. இலத்தீன், கிரேக்கம், ஹீப்ரு ஆகிய மூன்று மொழிகளும் பேச்சு வழக்கிலிருந்து வீழ்ந்து விட்டன. இந்நிலையில் தொன்மைப் போட்டிக்கு மிக வன்மையுடன் நிற்பது தமிழ் மொழி மட்டுமே யாகும். (தமிழும் உலக மொழிகளும் ப.33) என்று சாத்தூர் சேகரன் அவர்கள் குறிப்பிடுவது ஈண்டு எண்ணிப் பார்க்கத் தக்கதாகும்.

மேலும் அவர் "நாம் கேள்விப்பட்ட தமிழின் வயது 5000 – 3000 ஆண்டுகள். ஆனால் உண்மைத்தமிழின் வயது இலட்சம் ஆண்டுகளாகும். என்பதால் ஆயிரக்கணக்கான மொழிகள் உலகில் தோன்றும் முன்பே தமிழ் பேச்சும் எழுத்தும் கொண்ட செம்மையான மொழியாக இருந்துள்ளமை அறியலாகும்.

தமிழின் உலகளாவிய சிறப்பும் நிலைப்பும் :

உலகின் பல்வேறு நாடுகளின் ஊர்ப் பெயர்களும், மக்கட் பெயர்களும், பேச்சு மொழிப் பெயர்களும், வினையடிச் சொற்களும் தமிழின் தொன்மையான வடிவங்களாக உள்ளன. சில அப்படியே வழங்குகின்றன; சில சிதைந்து வழங்குகின்றன என்பதைப் பல சான்றுகளால் மானுடவியல் அறிஞர்களும், மொழி அறிஞர்களும் உறுதிப்படுத்துகின்றனர். உலகின் அனைத்து நாகரிகங்களும் தமிழ் மொழியுடனும், தமிழ்ப் பண்பாட்டு மூலங்களுடனும், மிக நெருங்கிய தொடர்பினைப் பெற்றுள்ளன. அனைத்து நாகரிகங்களும் (கடல் கொண்ட) குமரிக்கண்ட நாகரிகத்துக்குப் பிந்தியவை என்று சாத்தூர் சேகரன் குறிப்பிடுகின்றார்.

ஆஸ்திரேலியா, ஆசியா, ஆப்ரிக்கா, மத்திய தரைக்கடல் நாடுகள், அரேபியா முதலிய நாடுகளின் மக்கள் யாவரும் குமரிக்கண்ட திராவிட மக்களின் வாரிசுகளே! இதனாலேயே கணியன் பூங்குன்றனார் தம் புறநானூற்றுப் பாடலில் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்றார் போலும்!

பிற மொழிகளில் தமிழின் செல்வாக்கு :

இன்றைய உலக மொழிகள் பலவற்றில் குறிப்பாகச் சீன மொழியில், நீ என்பது அப்படியே நீ என்றும், தாம் என்பது தாமன் என்றும், தாய் என்பது தாயி எனவும், ஜப்பான் மொழியில் அணை என்பது அன எனவும், தழை என்பது தரு எனவும், கூவல் என்பது கூபொ எனவும், இராக் மொழியில் தமிழின் யாமம் – யோம் எனவும், நாள் என்பது நஹார் எனவும், அரபு மொழியில் தமிழின் அம்மா – உம்ம எனவும், அப்பா – ஆபி எனவும், கூழ் – கூட் எனவும் மலாய் மொழியில் தமிழின் முதியவன் முதுவ எனவும், பகல் – பகி எனவும், பூ – பூங்க எனவும், கப்பல் – கெப்பல் எனவும் வழங்குகின்றன. சேகரன் தம் ***தமிழும் உலக மொழிகளும்*** என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார் (பக். 15–25).

லாகோவரி என்னும் மொழியறிஞர் 700க்கும் மேற்பட்ட சான்றுகளைக் காட்டி உலக மொழிகளில் தமிழ் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கலந்து வழங்குவதைக் காட்டுகின்றார்.

"தமிழுக்கும் சீன மொழிக்கும் தொடர்பு உண்டென்று சொல்லப்படுகிறது. எபிரேயம், கிரேக்கம், சமஸ்கிருதம் முதலிய மொழிகளில் தமிழ்ப் பதங்கள் காணப்படுகின்றன. பழைய ஜெர்மன் காதிக், லாத்தின் முதலிய மொழிகளிலுள்ள சொற்கள் தமிழடியாகப் பிறந்துள்ளன. சுமேரிய மொழிக்கும், தமிழுக்கும் பழைய தொடர்பு காணப்படுகின்றது. பின்லாண்டில் வழங்கும் மொழியில் அனேகம் தமிழ் சொற்கள் காணப்படுகின்றன எனத் "தமிழர் சரித்திரம்" என்ற நூலில் ந.சி.கந்தையா கூறுவது (ப.21–22) தமிழின் உலகளாவிய செல்வாக்கினைக் காட்டுகிறது.

தமிழ் ஓர் உயர்தனிச் செம்மொழி

தமிழ் பல்வேறு சிறப்புகளையும், தகுதிகளையும், நெடிய, பழைய வரலாற்றுப் பாரம்பரியத்தையும் உடையது. தானும் வளர்ந்து தன் சேய் மொழிகளையும் வளர்த்துள்ளது. தன்னுள் பல்துறை வளர்ச்சி கண்ட சிறப்பினது. இதனை "நன்னூல் என்னும் பின்னூல் கொண்டே உயர்தனிச்செம்மொழி எனக் கால்டுவெல்லார் தமிழ் மொழியை மதிப்பிட்டார் எனின் அவர் தொல்காப்பியத்தைக் கற்க வாய்த்திருந்தால் "உலக முதன்மொழி தமிழே" என உறுதிபட நிறுவியிருப்பார் அல்லரோ? என இளங்குமரனார் கூறுவது போல், தமிழ் தனிச் செம்மொழியாவது இன்று மெய்ப்பிக்கப்பட்டு வருகிறது.

பல்லாயிரம் ஆண்டுகளாக வழங்கப்படும் இலக்கிய இலக்கணப் பரப்பு, கையாள்வதற்கேற்ற எளிமை, மதுரத்தன்மை, நெகிழ்வும், செப்பமும் உடைய போக்கு உலகின் எல்லா நாடுகளிலும் பரவிக் காணப்படும் தன்மை இவற்றை வைத்து நோக்கும்போது தமிழ் ஓர் உயர்தனிச் செம்மொழி என்பதும், பல ஊழிக்காலங்களைச் சந்தித்தும் அழியாத் தன்மையுள்ள தெய்வப் பெற்றி உடையது என்பதும் இதனால் உணர முடிகிறது.

நிறைவுரை

"முன்னைப் பழைமைக்கும் பழைமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்ச் "சீரிளமைத்தன்மையும், செழித்த பல்துறை வளமும் உடையது தமிழ் ஆகும். தமிழில் என்ன இல்லை?

அனைத்துத் துறைகளும் சார்ந்த நூல்கள் கடந்த 100 ஆண்டுகால எல்லையில் தமிழில் கனிந்து மணம் வீசுகின்றன. கடல் கொண்ட நூல்களும் இப்போது கிடைக்கும் எனில் உலகே வியக்கும் ஒப்பற்ற மொழியாக மேலும் ஒளி வீசும். பேச்சு, எழுத்து, இசை, ஓவியம், அறிவியல், தெய்வத்தன்மை, வரலாற்றுத் தொன்மை, கலை நேர்த்தி, ஆகிய எண்ணற்ற தகுதிகளை உடைய தமிழ் "ஓர் உயர்தனிச் செம்மொழியே" என்பதில் யாவர்க்கும் ஐயமில்லை! இம்மொழியை மேன்மேலும் வளப்படுத்தி மகிழ்வது தமிழர்தம் இன்றியமையாக் கடமையாகும்.

பயன்பட்ட நூல்கள் :

1. பாரதியார் கவிதைகள் – ச.மெய்யப்பன் – ப.ஆ. மாணிக்கவாசகர் நூலகம், சிதம்பரம், செம்பதிப்பு – 1995

2. தமிழும் உலக மொழிகளும்– சாத்தூர் சேகரன் (நூ.ஆ) வள்ளுவர் முத்தமிழ்மன்றம் சாத்தூர், மு.ப.2001

3. தமிழர் சரித்திரம் – ந.சி.கந்தையா (நூ.ஆ) இண்டர்நேசனல் லிங்குஸ்டிக் சென்டர் 2, ஆர்.சி.தெற்கு தெரு, சாத்தூர். மு.ப. 2001

4. வாழ்வியல் விளக்கம் – புலவர் இரா.இளங்குமரனார் தமிழ்மண் பதிப்பகம் 2,சிங்காரவேலர் தெரு, தி.நகர், சென்னை–17. மு.ப. 2003

குறுந்தொகை விளக்கும் தலைமக்களுக்கு இடையில் உள்ள உறவுகள்

த. செந்தமிழ்ச் செல்வன்,

முன்னுரை

பண்டையத் தமிழரின் வாழ்வியலை அறிந்து கொள்வதற்குச் சங்க இலக்கியங்கள் சான்றாகும். சங்க இலக்கியங்கள் எனப்படும் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் தமிழ் மொழியின் தொன்மையையும் வன்மையையும் உலகிற்கு எடுத்துக்காட்டி தமிழர்க்குப் பெருமை சேர்க்கும் அற்புதமான கருத்துக் கருவூலங்களாகத் திகழ்கின்றன. மேன்மைமிக்க இவ்விலக்கியங்களுள் அளவில் குறைந்தும் சுவையால் நிறைந்தும் விளங்குவது குறுந்தொகைப் பாடல்களாகும். கற்பனை வளமும் அழகான நயமிக்க உவமைகளும் இடம்பெற்ற குறுந்தொகை அகவாழ்வினை அழகுற எடுத்தியம்பும் இலக்கியமாகும். தலைவன் தலைவியர் அகவாழ்வு பற்றிய செய்திகள் இதில் சிறப்பாகக் காணப்படுகின்றன.

அன்புடைய நெஞ்சங்கள் இரண்டு :

தலைவன் தன் காதலியின் பொருட்டு ஏங்கிய ஏக்கம் தீர்ந்தது. விரும்பியவாறு அவளுடைய நட்பைப் பெற்று மகிழ்ந்தான். பெற்றோர் அறியாமல் பெற்ற உறவு ஆகையால் தலைவியின் உள்ளத்தில் ஒருவகைக் கலக்கம் இருந்தது. தலைவன் தன்னை விட்டுப்பிரிந்து சென்றால் என்ன செய்வது என்ற ஏக்கம் அவளுடைய மகிழ்ச்சியில் கலந்திருந்தது. இதை உணர்ந்த தலைவன், தம் உள்ளம் கலந்த கலப்பு எத்தகையது என்பதை எடுத்துக்காட்டி, இனித் தம் வாழ்வில் பிரிவு இல்லை என நம்புமாறு தேற்றினான்.

என் தாயும் உன் தாயும் ஒருவர்க்கு ஒருவர் யார் யாரோ? எந்த முறை உடைய சுற்றத்தார்? யானும் நீயும் இதற்கு முன் எவ்வாறு ஒருவரை ஒருவர் அறிவோம். ஒருவகை உறவும் தொடர்பும் இல்லாதிருக்க, செம்புலத்தில் பெய்த நீர் பிரிவுக்கு இடம் இல்லாமல் கலந்துவிடுதல் போல், நம் அன்புடைய நெஞ்சங்கள் கலந்து விட்டனவே.

"யாயும் ஞாயும் யாரா கியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே".

(குறு. 40, செம்புலப்பெயல் நீரார்)

இங்கு தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள உறவு செம்புலப் பெயல் நீர் என்றது சரியான எடுத்துக்காட்டாகும்.

பூக்கள் விழும் ஓசையில் உறங்காத இரவு

இரவின் மடியில்தான் அன்பும் அரவணைப்பும் அதிகமாகும். குறுந்தொகைப் பாடல் ஒன்றில் தலைவன் ஒருவன் இரவிலே வருவதாகச் சொல்லிச் சென்றான்; அவ்வாறே வந்தான். ஏற்பாடு செய்தவாறு காணமுடியவில்லை. இயற்கையில் நிகழ்ந்த வேறு சில ஒலிகளால் குழப்பம் ஏற்பட்டு விட்டது. அவன் வந்ததைத் தலைவியும், தோழியும் உணர்ந்து கொள்ள முடியவில்லை. மறுநாள் தலைவன் வந்து, தான் வந்து காத்திருந்து ஏமாற்றம் அடைந்ததைக் கூறி வருந்தினான். தாம் இரவெல்லாம் அவனுக்காக விழித்திருந்ததைத் தோழி கூறித் தம்மேல் பழி இல்லை என்றாள்.

இந்தப் பெரிய ஊரெல்லாம் உறங்கினாலும் யாங்கள் உறங்கவில்லையே. எம் வீட்டிற்குப் பக்கத்தில் எழில் குன்றத்தின் மேல் உள்ள நொச்சியின் அழகு மிகுந்த மெல்லிய கிளைகள் உதிர்க்கும் பூக்கள் விழும் ஓசையும் நன்றாகக் கேட்டுக் கொண்டு உறங்காமலிருந்தோமே.

"கொன் ஊர் துஞ்சினும் யாம்துஞ்சலமே
எம்இல் அயலது எழில் உம்பர்
மயில் அடி இலைய மாக்குரல் நொச்சி
அணிமிகு மென்கொம்பு ஊழ்த்த
மணிமருள் பூவின் பாடுநனி கேட்டே"

(குறு.138, கொல்லன் அழிசி)

உள்ளத்தால் உணரும் உறவுகளைச் சொற்களால் புலப்படுத்தல் அரிது. ஆயின் கற்பனைத்திறன்மிக்க புலவர்கள் அந்த உணர்ச்சிகளைத் தம் பாட்டில் வடித்து உணர்த்தும்போது அவற்றை உணர்ந்து போற்றுகிறோம். மேலும், குறுந்தொகையில் காதலரின் உள்ளத்து உணர்ச்சிகளும் தோழி முதலியவரின் உணர்ச்சிகளும் சொல்லோவியமாக அமையும் திறன் போற்றத்தக்கது.

வேங்கைமரம் பூத்து மணம் கமழும் சிற்றூர்

ஒருகாட்சி — இருண்ட நள்ளிரவில் பெருமழை பொழிகிறது. தலைவன் தலைவியை நாடி வந்து நிற்கிறான். அவனைக் கண்ட தோழி வியந்து, இந்த இருளிலும் மழையிலும் நீ எவ்வாறு வந்தாய் என்கிறாள்.

மழை இடமெல்லாம் மறைப்பதால் வானம் தெரியவில்லை. நீர் பரந்து ஓடுவதால் நிலம் தெரியவில்லை. ஒளி போய் விட்டமையால் இருள் மிகுதியாக உள்ளது. பலரும் உறங்கும் நள்ளிரவில் இந்நிலையில் நீ எவ்வாறு வந்தாயோ? வேங்கைமரம் பூத்து மணம் கமழும் எம் சிற்றூரை எப்படித் தேடி அறிந்து வந்தாயோ? மலர் மணம் அறிந்து அதன் வாயிலாக அறிந்து வந்தாய் போலிருக்கிறது. உன் முயற்சித் துன்பத்தை நினைக்கும்போது என்மனம் வருந்துகிறது என்கிறாள்.

"பெயல்கண் மறைத்தலின் விசும்புகா ணலையே
நீர்பரந் தொழுகலின் நிலம்கா ணலையே
எல்லை சேறலின் இருள்பெரிது பட்டன்று
பல்லோர் துஞ்சும் பானாட் கங்குல்
யாங்குவந் தனையோ ஓங்கல் வெற்ப
வேங்கை கமழும்எம் சிறுகுடி
யாங்குஅறிந் தனையோ நோகோ யானே

(குறு. 355, கபிலர்)

என்னும் குறுந்தொகைப் பாடல் சுவைக்கத்தக்கது".

உறக்கத்தை மறக்கும் கண்கள்

மனிதனின் மனம் ஒன்றில் ஈடுபட்டு அதையே நினைத்து ஏங்கும்போது, அந்தப்பொருளின் உருவம் கண்ணெதிரே தோன்றுவது போல் இருக்கும். அது உருவெளி எனப்படும். அவ்வாறே அந்தப் பொருளின் தொடர்பான ஒலியும் கேட்பதுபோலவே இருக்கும். அது மனத்தின் கற்பனையே. மனத்தின் ஈடுபாட்டின் மிகுதியால் அமையும் கற்பனையே.

தலைவி தலைவனை நினைத்து ஏங்குகிறாள். அவனுடைய தேர் வரும் என்று எண்ணி ஏங்குகிறாள். நள்ளிரவின் அமைதிக்கு இடையே அவனுடைய தேர் வருவது போன்ற ஒலியே கேட்கிறது. அந்த ஒலியைக் கேட்பதிலேயே சிந்தனை செல்ல, உறக்கமும் போய்விடுகிறது. செவியின் ஈடுபாட்டால், கண்கள் தம் உறக்கத்தையும் மறந்து விடுகின்றன.

"பானாட் கங்குல்
மன்றம் போழும் இளமணி நெடுந்தேர்
வாரா தாயினும் வருவது போலச்
செவிமுதல் இசைக்கும் அரவமொடு
துயில்மறந் தனவால் தோழிஎன் கண்ணே"

(குறு. 301, குன்றியனார்)

கிடைத்ததைக் கொண்டு மகிழ்ந்து வாழ வேண்டும்

கொடிய பாலை நிலத்தில் உணவு கிடைக்காமல் யானைக் குடும்பம் ஒன்று வாடி வருந்துகின்றன. பெண் யானையின் பசியைக் களைவதற்காக ஆண்யானை முயல்கின்றது. தழை உணவோ, மூங்கிலோ எங்கும் கிடைக்காமையால் யானை மரத்தின் மெல்லிய கிளையை ஒடித்து அதன் பட்டையை உரித்துத் தன் துணை தின்னுமாறு தருகின்றது.

"பிடிபசிகளைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின் தோழி அவர் சென்ற ஆறே"

(குறு. 37 பாலைப் பாடிய பெருங்கவிக்கோ)

புறத்தே வளம் குன்றினாலும் அகத்தே அன்பு குன்றாமல் கிடைத்ததைக் கொண்டு மகிழ்ந்து வாழ வேண்டும் என்று புலவர் கொண்ட ஆர்வம் இப்பாட்டால் விளங்குகின்றது.

முடிவுரை

காதல் ஒரு உயர்ந்த பண்பாகும். காதலால் பண்பட்டு வளரும் மனத்தில் அஞ்சாமை மிகும். தன்னலம் குறையும். துன்பத்தைத் தாங்கும். ஆற்றல் பெருகும். தலைவனோடு இரண்டறக் கலந்து நிற்கும் தலைவியைக் குறுந்தொகையில் காண முடிகிறது. பொதுவாக நோக்கும்போது தலைமக்களுக்கு இடையே உள்ள உறவு நெருக்கமுடையதாகக் காணப்படுகிறது.

இலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகள்

முனைவர் சு.குழந்தைவேல் பன்னீர்செல்வம்

அறிவியல் (Science), தொழில்நுட்பம் (Technology), அறிவியல் தொழில்நுட்பம் (Science and Technology) போன்ற சொற்கள் ஆங்கிலத்தில் பரவலாக வழக்கில் உள்ளன. ஒரு காலத்தில் நாம் கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல் போன்ற துறைகட்கு மட்டும் பயன்படுத்தி வந்த 'அறிவியல்' (Science) என்ற சொல், இன்று சமூக அறிவியல் (Social Science), அரசியல் அறிவியல் (Political Science), மனையியல் (Home Science) என்று பலதுறைகட்கும் பயன்படுத்தப்படுகிறது. அதேபோன்று, பொறியியலுக்கும் அதனைச் சார்ந்த தொழில்நுட்பங்களுக்கும் பயன்படுத்தப்பட்டு வந்த 'தொழில்நுட்பம்' (Technology) என்ற சொல்லிற்கு, "The study or use of the mechanical, arts and applied sciences" என்று அகராதி பொருள் கூறுகிறது. இதனையொட்டி இன்றைய அளவில், கண் (Ophthalmology), இதயம் (Cardiology), உணவு வகைகள் (Catering Technology), ஆடை வடிவமைப்பு (Fashion Technology), நெசவு (Textile Technology), தகவல் தொழில்நுட்பம் (Information Technology), மண்பொருள் தொழில்நுட்பம் (Ceramic Technology), தோல் தொழில்நுட்பம் (Leather Technology), அச்சுத்தொழில் நுட்பம் (Printing Technology) போன்ற பல்துறை சார்ந்த நுட்பங்களை நாம் பெற்றுள்ளோம். அறிவுத்துறைகளைப் பயன்படுத்திச் செயலாற்றும் தொழில்முறைகள் அனைத்திற்கும் "Technology" என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. வேளாண்மை தொழில்நுட்பம் (Agricultural Technology), உயிரிதொழில்நுட்பம் (Bio-Technology), மருத்துவம் போன்ற துறைகளிலும் இச்சொல் பரவலாகப் பழக்கத்தில் உள்ளது. 'அறிவியல்' என்ற சொல் பரந்த அளவில் – விரிந்தபொருளில் ஆளப்பட்டதைப் போலவே 'தொழில்நுட்பம்' என்ற சொல்லும் இன்று விரிந்த அளவில் செறிவான பொருளை வெளிப்படுத்துவதாய் அமைகிறது.

அறிவியல், நம்நாட்டில் பண்டுதொட்டுப் பயன்பாட்டிலிருந்ததைப் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் சான்று பகருகின்றன. பழந்தமிழர் வியத்தகு வானநூலறிவுடையராகக் காணப்பட்டனர். வானவெளியில் கதிரவனின் இயக்கம் ஈர்ப்பாற்றலும் கதிர்மண்டிலமும் காற்று இயங்கும் திசையும், ஒன்றுமில்லாதிருக்கின்ற ஆகாயமும் பற்றி முதுகண்ணன் சாத்தனார் பாடிய,

"செஞ்ஞாயிற்றுச் செலவும்
அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்
பரிப்புச் சூழ்ந்த மண்புலமும்
வளிதிரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமும் என்றிவை
சென்று அளந்து அறிந்தோர் போல என்றும்
இனைத்து என்போரும் உளரே"

என்ற ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு கூறப்பட்ட அறிவியலுண்மையினை உலகறியச் செய்கிறது இப்பாடல்.

"எண்ணிய நூலோர் இயல்பினின் வழாஅது
மண்ணகம் ஒருவழி வகுத்தனர் கொண்டு
புண்ணிய நெடுவரை போகிய நெடுங்கழைக்
கண்ணிடை ஒருசாண் வளர்ந்தது கொண்டு
நூல்நெறி மரபின் அரங்கம் அளக்கும்
கோல்அள இருபத்து நால் விரலாக
எழுகோல் அகலத் தெண்கோல் நீள
ஒருகோல் உயர்ந்த உறுப்பின தாகி
உத்தரப் பலகையோடு அரங்கின் பலகை
வைத்த இடைவெளி நாற்கோல் ஆக
ஏற்ற வாயில் இரண்டுடன் பொலியத்
தோற்றிய அரங்கில் ____________"

என்ற சிலப்பதிகார வரிகளில் கட்டடக்கலையில் நிலம் தேர்ந்தெடுப்பும், அளவீடுகளும் தெளிவாகப் பதிவாகி இருக்கின்றன. மேலும் அரங்கு கட்ட உகந்த மண்ணகம் என்பது எலும்பு, உமி,

கூர்ங்கல், களிமண், உவர்மண், ஈளைமண், பொல்லாச்சாம்பல், துகள் போன்றவை அற்றதாகவும், தேர் ஓடும் தெருவுக்கு எதிர்முகமாகவும் நகர்நடுவே அமைய வேண்டும் என்றும் சிலப்பதிகாரம் கூறுகிறது. இது கட்டடக் கலையின் தொழில்நுட்பத்தைப் பகர்கிறது.

கோள்களின் இயக்கத்தினால் உலகில் நன்மை தீமைகள் நிகழ்வதாக ஒரு நம்பிக்கை அந்நாளில் நிலவிற்று. இன்றும்கூட அந்த நம்பிக்கை பரவலாக உண்டு. மணிமேகலை மீது மையல் கொண்டு ஏங்கிய உதயகுமாரனின் முன் மணிமேகலாதெய்வம் வந்து 'மன்னவன் செங்கோல் நிலைபிறழ்ந்தால் வானில் கோள்களும் நிலைபிறளும். அவ்விதம் கோள்கள் நிலைதிரிந்தால் மழைவளம் குன்றும். மழை இல்லாது போனால் உயிர்கள் இறந்து போகும்'. என்று கூறுகிறது. இதை,

> "கோன்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்
> கோள்நிலை திரிந்திடின் மாரிஅறம் கூரும்
> மாரி அறங்கூரின் மன்னுயிர் இல்லை"

என்ற மணிமேகலை வரிகள் உணர்த்தும். இது நியூட்டனின் சார்பியல் தத்துவத்தின்படி (Theory of relativity) அமைகிறது. மேலும் இக்காப்பியத்தில் வைதீகவாதி, சைவவாதி, பிரமவாதி, வைணவாதி, வேதவாதி, ஆசீவகவாதி, நிகண்டவாதி, சாங்கியவாதி, வைசேடிகவாதி, பூதவாதி, பௌத்தவாதி எனச் சமயக்கொள்கை பரப்புவோர் பலரைக் குறிக்கிறது. அவருள், ஆசீகவாதியின் கொள்கைப்படி – வண்மையுடைய நிலஅணு, நிலம் சேர்த்து ஆழும் நீர்அணு, குறுக்கிட்டு அசைதலை உண்டாக்கும் காற்றுஅணு, எரிந்து மேல்நோக்கி எழும் நெருப்புஅணு ஆகிய நான்கும் இணைந்து ஒருவித ஆதியும் அந்தமும் அற்று விளங்கும் 'பரமாணுக்களாக' விளங்கும் என்பதை,

> "__________ யாவதும் சிதைவுத செய்யா;
> புதிதாய்ப் பிறந்த ஒன்றில் ஒன்றில்புகார்;
> முதுநீ ரணுநில அணுவாய்த் திரியா;
> ஒன்றி ரண்டாகிப் பிளப்பதும் செய்யா;
> உலாவும், தாழும் உயர்வதும் செய்யும்__"

என்று மணிமேகலை இலக்கியம் இந்த நூற்றாண்டின் வியத்தகு சாதனையான அணு குறித்த சிந்தனையை கொண்டிலங்குவதைக்

காணமுடிகிறது. மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரர் தனது நெடுநல்வாடையில்,

"விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம்
இருகோள் குறிநிலை வழுக்காது குடக்கேர்
பொருதிறஞ் சாரா அரைநாள் அமயத்து,
நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டு
தேஎங் கொண்டு தெய்வம் நோக்கி
பெரும்பெயர் மன்னர்க்கு ஒப்ப மனைவகுத்து"

என்ற வரிகளில் இரண்டு குச்சிகள் நட்டு சூரியன் உதயம்முதல் மறைகின்றவரை விழும்நிழல் ஒரே நேர்க்கோட்டில் அமையும்படி சூரியவீதி (Ecliptic) சார்ந்து கிழக்கு மேற்காகக் குறித்து மன்னவருக்கு மனைவகுக்க வேண்டும் என்று அன்றே அறிவியல் சார்ந்த கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். காலத்தைக் கணித்து தங்களது வாழ்க்கைக்குப் பயன்படுத்தியதை,

"பொழுது அளந்து அறியும் பொய்யா மாக்கள்"
என்றும்,

"நாழிகை இசைப்ப"

என்றும் பண்டையநாளில் காலக்கணிதர் இருந்தமையை இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

நாம் இன்று பயன்படுத்தும் அறிவியல் தொழில்நுட்பம் நமது மண்ணுக்குப் புதியது. மேலைநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. அலோபதி (Allopathic System) எனும் ஆங்கில மருத்துவமுறையும் புதியது. அதில் நமக்கு எந்த பாரம்பரியமும் அனுபவத் தொடர்பும் இல்லை. இன்று நாம் பயன்படுத்தும் அறிவியல் தொழில்நுட்பம், அலோபதி மருத்துவமுறை போன்று, நமக்கு முழுவதும் புதியதாகும் என்றாலும் நம்முடைய முன்னோர்கள், மருத்துவத்துறையில் நல்ல முன்னேற்றம் கண்டவர்கள். நமது நாட்டில் ஆயுர்வேதம் நீண்ட பாரம்பரியமுடையது "ஆயுளைப் பற்றியும், நீண்ட பிணியற்ற ஆயுளைப்பற்றியும் விளக்குவதால் இதற்கு ஆயுர்வேதமெனப் பெயர் வந்தது". பிணியைப் போக்குதல், உடலுறுதி உள்ளவர்களின் ஆரோக்கியத்தைக் காத்தல் ஆகியவை ஆயுர்வேதத்தின் முக்கிய குறிக்கோள்களாகும்.

"மருத்துவ அறிவியல் வளர்ந்துள்ள இன்று கையாளப்படும் உடற்கூறு விளக்கம்; காது—மூக்கு அறுவை சிகிச்சை; மகப்பேறு அறுவை சிகிச்சை, சிறுநீரகக் குழாயிலிருந்து கல்லை அகற்றுதல்; கண்புரை நோயை அறுவையால் நீக்குதல்; மூலநோயை அறுவையால் அகற்றுதல் போன்றவையும் அவற்றுக்கான கருவிகளும் அன்றே சரகசம்கிதையில் கூறப்பட்டு உள்ளன". அதேபோன்று சித்த மருத்துவமும் தமிழகத்தில் வளர்ந்திருந்தது. "சித்த மருத்துவம் என்றைக்கு மனிதஇனம் உலகில் தோன்றியதோ அன்றைக்கே தோன்றிவிட்டது. இம்மருத்துவம் எல்லா விதமான நோயையும் தீர்க்கவல்லது. இம்மருத்துவம் இயற்கையானது, எளிமையானது" என்று சித்தமருத்துவச் சிறப்பு பற்றி சித்தமருத்துவர் சுந்தரராசன் குறிப்பிடுகிறார்.

உலகச் செயல்பாடுகளான ஆக்கல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலையும் இன்றைய 'அறிவியல்' ஒன்றே செய்து வருகிறது என்பதை,

"ஆக்குவை, அழிப்பாய், காப்பாய்;
அயன், அரி சிவனார் தம்முள்
தேக்கிய செயல்கள் மூன்றும்
சா்த்து நீ எழுந்தாய்" (ப.219)

என்று குலோத்துங்கன் விளக்குகிறார்.

அறிவியலும் தொழில்நுட்பமும் கோலோச்சும் காலமிது. இன்று, இவற்றின் தாக்கம் இன்றைய வாழ்விற்கு ஒரு புதிய பரிமாணத்தையும், பொலிவையும், சக்தியையும் தருகிறது. "இன்றைய அறிவியல் தொழில்நுட்பம் பதினாறாம் நூற்றாண்டில் இருந்து தொடங்கியது. அறிவியல் முறைக்கு (Scientific Method) வித்திட்டவர் கலிலியோ. அவர் காலத்திலிருந்து தொடங்கி இன்று கற்பனைக்கும் எட்டாத வளர்ச்சியைக் கண்டிருக்கிறது. முன்னேறிய நாடுகளில், வாழ்க்கையின் அங்கமாகவே அறிவியல் உருவாகியிருக்கிறது. அன்றாட வாழ்வினின்றும் பிரித்துப்பார்க்க இயலாத அளவிற்கு ஒன்றி நிற்கிறது". தமிழில் அறிவியல் தொழில்நுட்பத்தின் ஆதிக்கம் பற்றிய கருத்துக்கள், கதைகளிலும் கட்டுரைகளிலும் இடம் பெற்ற அளவிற்குத் தமிழ்க் கவிதைகளிலும் இடம் பெற்றிருக்கிறது.

ஒருவன் ஒருத்தி

க.தண்டபாணி

நன்னூல் ஒரு சிறந்த இலக்கண நூல். பிழையின்றி பேசவும் எழுதவும் கற்பிக்கும் நூல். பிழையின்றி பேசுவதும் எழுதுவதும் இலக்கியம். திருக்குறள் ஒரு சிறந்த இலக்கியம். இலக்கணத்திற்குச் சற்றும் மாறுபடாமல் இலக்கணத்தை முழுமையாகக் கடைப்பிடித்துத் திருவள்ளுவர் திருக்குறளை இயற்றியுள்ளார்.

'ஒருவன் ஒருத்தி பெயர்மே லெண்ணில'

என்பது நன்னூல் (சொல்) 288 ஆம் நூற்பா ஆகும். ஒருவன் ஒருத்தி என வருமேயன்றி இவற்றின் மேல் இரண்டு முதலாகிய எண்களால் இவ்வாண்பாற் பெயரும் பெண்பாற் பெயரும் வருவன இலவாம். இஃது இந்நூற்பாவின் பொருள்.

ஒருவன் என்ற சொல்லைத் திருவள்ளுவர் மூன்று குறட்பாக்களில் பயன்படுத்தியுள்ளதைக் காண்போம்.

1. "வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
   வாழ்நாள் வழியடைக்குங் கல்". - குறள் - 38
2. "ஒழுக்கறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
   அழுக்கா றிலாத இயல்பு". - குறள் : 161
3. "அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
   புறங்கூறான் என்றல் இனிது". - குறள் : 181

ஒருத்தி என்ற சொல்லை ஒரே ஒரு குறட்பாவில் திருவள்ளுவர் பயன்படுத்தியுள்ளதைக் காண்போம்.

1. "கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
   காட்டிய சூடினீர் என்று". - குறள் : 1313

இரண்டு முதலிய எண்களால் இவ்வாண்பாற்பெயர், பெண்பாற்பெயர் இருவன், இருத்தி எனவும் மூவன் மூத்தி எனவும் வாரா என்பது இந்நன்னூல் நூற்பாவின் உரை. இவ்வுரைக்கிணங்க திருவள்ளுவர்,

இருவன், இருத்தி, மூவன், மூத்தி என்ற சொற்களைத் திருக்குறளில் எவ்விடத்தும் பயன்படுத்தவில்லை.

இரண்டு முதலாகிய எண்களால் இவ்வாண்பாற்பெயர், பெண்பாற்பெயர் இருவர், மூவர் என்று வரும் என்பது இந்நன்னூல் நூற்பாவின் உரை.

இருவர் என்ற சொல்லை ஒரே ஒரு குறட்பாவில் திருவள்ளுவர் பயன்படுத்தியுள்ளதைக் காண்போம்.

"வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு". - குறள் : 1108

மூவர் என்ற சொல்லை இரண்டு குறட்பாக்களில் திருவள்ளுவர் பயன்படுத்தியுள்ளதைக் காண்போம்.

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை". - குறள் : 41

"ஒற்றொற்று உணராமை ஆள்க உடன் மூவர்
சொல்தொக்க தேறப் படும்". - குறள் : 589

திருவள்ளுவர் இலக்கணப் பிழையானவற்றை (இருவன், இருத்தி) நீக்கியுள்ளார். பிழையில்லனவற்றைச் (இருவர், மூவர்) சேர்த்துள்ளார்.

மாது, மது, சூது, கொலை, பேராசை, பெருஞ்சினம், பொறாமை முதலிய தீய குணங்களை நீக்குவது மட்டுமே ஒழுக்கம் என்று சிலர் நினைக்கின்றனர். ஈகை, பணிவு, நட்பு, அறிவு, கல்வி, அன்பு முதலிய நற்குணங்களையும் பெறுவதே ஒழுக்கம்.

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்." - குறள் 466

திருக்குறளில் காணும் தொடரியல் புதுமைகள்

டாக்டர் பொற்கோ

திருவள்ளுவப் பெருந்தகை மிகப் பல வாழ்வியல் உண்மைகளை அழகாக முறைப்படுத்தி எளிய மொழிநடையில் எளிய யாப்பில் வழங்கியிருப்பது இலக்கிய உலகத்திலேயே ஒரு தனிச் சிறப்பிற்குரிய பணி என்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை எழ இடமில்லை. மொழிநடையாலும் கூறும் கருத்தாலும் அறிஞர்கள் எல்லோரும் தாம் வாழும் சமுதாயச் சூழலுக்குக் கட்டுப்பட்டவர்தாம் என்பது ஆய்வாளர் எல்லோரும் நினைவில் கொள்ள வேண்டிய உண்மை. சில அறிஞர்கள் தாம் வாழும் சமுதாயச் சூழலுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டவராக இருக்கலாம். வேறு சில அறிஞர்கள் தம் சமகாலச் சமுதாயச் சூழலுக்கு ஓரளவுக்கு மட்டுமே கட்டுப்பட்டவராக இருக்கலாம். தம் சமகாலச் சமுதாயச் சூழலுக்கு அறவே கட்டுப்படாத அறிஞர் யாரும் இதுவரை இருந்ததாகத் தெரியவில்லை. ஒரு குறிப்பிட்ட சமுதாயச் சூழலில் வாழ்ந்த ஒருவர் ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றி எழுதிய நூல் வேறொரு சமுதாயச் சூழலில் வாழும் மக்களுக்கு முழுமையாகப் பொருந்தி வரும் என்று உறுதி இல்லை. அப்படி முழுமையாகப் பொருந்தி வரவேண்டும் என்று எதிர்பார்ப்பதும் முறையாகாது. எவ்வளவுக்குப் பொருந்தி வருகிறதோ அவ்வளவுக்குப் பாராட்டத்தக்கது.

சமுதாயச் சூழல் மாறுபட மாறுபட ஒரு சமுதாயம் வாழ்வு பற்றிக் கொண்டிருக்கிற கருத்திலும் மதிப்பிலுங்கூட மாற்றங்கள் ஏற்படும். அதே போலக் கலை வெளிப்பாட்டு முறையிலும் மொழி நடையிலும் சுவைப் பாங்கிலும் கூட மாற்றங்கள் ஏற்படும்.

இந்தப் பின்னணியில் இலக்கியங்களை ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளும்போது மிகச் சில இலக்கியங்களே நெடுங்கால வாழ்வுக்குரிய நல்ல இலக்கியங்களாகத் தேறுகின்றன. அப்படித் தேறும் இலக்கியங்களுள் திருக்குறள் முதன்மையானதாகக்

கருதத்தக்கது. சமுதாய வளர்ச்சியில் ஏற்பட்ட மதிப்பு மாற்றங்களுக்கு ஏற்பத் திருக்குறளில் காணும் சில கருத்துக்கள் கூட இன்றையச் சூழலில் பொருந்தாதனவாகவும் இருக்கலாம். அப்படிப்பட்ட கருத்து ஆராய்ச்சியில் இந்தக் கட்டுரை ஈடுபடவில்லை.

திருவள்ளுவருடைய மொழிநடையில் காணும் சில புதுமைகளை மட்டுமே இக்கட்டுரை ஆராய்கிறது. புதுமை என்பது குறிப்பிடத்தக்க வேறுபாடு என்ற பொருளில் இங்கே ஆளப்படுகிறது.

திருவள்ளுவருடைய மொழிநடையில் சிறப்பாகச் சில தொடரியல் புதுமைகளை மட்டும் இங்கே ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளுகிறோம்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்
இறைவன் அடிசேரா தார்."

இந்தத் திருக்குறளை உரைநடைப்படுத்தினால் அது, பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; இறைவன் அடி சேராதார் நீந்தார் என அமையும்.

ஒரு செய்யுளுக்குப் பொருள் கூறும்போது முதலில் தொடரியல் முறைப்படி அந்தச் செய்யுளை உரைநடைப்படுத்திக் கொள்ளவேண்டும். அப்படி உரைநடைப்படுத்தும்போது சில தொடரியல் விதிமுறைகளுக்கு ஏற்ப அந்தச் செய்யுளில் மறைந்து நிற்கும் சொற்களை வருவித்துக் கொள்ளலாம். மறைந்து நிற்கும் வேற்றுமை உருபுகளைப் பொருள் விளக்கத்திற்காக வெளிப்படுத்திக் கொள்வது போலச் செய்யுளில் மறைந்து நிற்கும் சொற்களையும் பொருள் விளக்கத்திற்காக வருவித்துக் கொள்வது நமது உரையாசிரியர்கள் மேற்கொண்ட நெறிமுறைகளுள் ஒன்று. மேற்காட்டிய குறளில் இறைவன் அடி சேராதார் நீந்தார் என்ற தொடர் இறைவன் அடி சேர்ந்தார் நீந்துவர் என்ற பொருளை உணர்த்துவதால் இறைவன் அடி சேர்ந்தார் பிறவிப்பெருங்கடல் நீந்துவர் என்று உரையாசிரியர்கள் உரை எழுதினர். மேற்குறிப்பிட்டது போல் உறழ்ந்து காட்டிப் பேசவேண்டிய சூழலில் எழுவாய்க் கரந்து நிற்கச் செய்திருக்கிறார் வள்ளுவர். இத்தகைய சூழலில் எழுவாய் கரந்து நிற்பது தமிழ் இலக்கிய உலகில் பொதுமையான ஒன்று அல்ல; இது ஒரு புதுமை.

"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்".

நகுதல் என்ற வினை வள்ளுவர் கால மொழிநடையில் செயப்படுபொருளை ஏற்கவல்லதாக இருந்திருக்கிறது. பூதங்கள் ஐந்தும் அகத்தே வஞ்சமனத்தான் படிற்றொழுக்கத்தை நகும் என இந்தக் குறள் உரைத்தொடர் வடிவம் பெறத்தக்கது.

"உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ளொற்றிக் கன்சாய் பவர்".

எனச் செயப்பாட்டு வினைத்தொடரில் அமைந்த குறள் மேற்கூறிய குறளின் தொடரமைப்பை நமக்குத் தெளிவுபடுத்துகிறது.

மேற்கூறிய குறளை உரைநடைப் படுத்தினால் வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும் என அமையவேண்டும். அப்படி உரைநடைப்படுத்தியும் இங்கே தொடர் முழுமை பெறாமல் இருப்பது கருதத்தக்கது. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் கண்டு பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும் என்று தொடரை அமைக்கும் போதுதான் தொடர் முழுமை பெறுகிறது. இங்கே கண்டு என்ற வினையெச்சம் வருவிக்கப்பட்டது. தொடரியல் நெறிப்படி இப்படி ஒரு வினையெச்சம் மறைந்து நிற்பது மிகவும் புதுமை. பொதுவாக வினையெச்சங்கள் மறைந்து நிற்பதில்லை. வெளிப்பட்டே நிற்கவேண்டும்.

"கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலால் கொளல்".

உரைநடைப் படுத்தும்போது இந்தக் குறள் கணை கொடிது, யாழ்கோடு செவ்விது, ஆங்கன்ன வினைபடு பாலால் கொளல் என அமையும். இதை மேலும் விளக்கமாக்கும்போது கணை செம்மை கொடிது; யாழ்கோடு செவ்விது; ஆங்கன்ன வினைபடு பாலால் ஒருவன் கொள்ளுக என இந்தக் குறள் விரியும். இந்தக் குறளில் யாழ்கோடு செவ்விது என்ற தொடரின் உதவியால் கணைகொடிது என்ற தொடரைக் கணை செம்மை கொடிது என்று விரித்திருக்கிறோம். செம்மை என்ற சொல் இங்கே வருவிக்கப்பட்டது.

இந்தச் சூழலில் இப்படி வருவிப்பது தமிழ்த் தொடரியலில் ஒரு புதுமையே. இந்தக் குறளில் மேலும் ஆய்விற்குரிய தொடரியல் செய்திகள் உள்ளன. அவற்றை இங்கே விளக்க முயல்வது பொருந்தாது.

"உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்".

இந்தக் குறளை உரைநடையாக்கம் செய்தால் உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார். கல்லாதவர் கடையரே என அமையும். மேலும் இதை விளக்கம் செய்தால் கல்லாதவர் கடையர் என்பதற்கு ஏற்பக் கற்றார் தலையாயவர் என அமையுமாறு உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங்கற்றார் தலையாயவர். கல்லாதவர் கடையர் என்று தொடர் விரிவு பெறும். இங்கே தலையாயவர் அல்லது மேலோர் என்ற சொல் வருவிக்கப்பட்டது. தலையாயவர் கடையர் என்ற சொற்கள் இங்கே பயனிலைகளாக நின்றன. பயனிலையைக் கரந்து மொழிதல் இங்கே நாம் காணும் புதுமை.

"நீங்கான் வெகுளி; நிறையிலன்; எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கும் எளிது".

இந்தக் குறள் உரைநடையாக்கம் பெறும்போது வெகுளி நீங்கான் எஞ்ஞான்றும் நிறையிலன் யாங்கணும் யார்க்கும் எளிதென அமையும். பொருள் விளக்கம் பெற மேலும் விரித்துரைக்கும்போது இக்குறளின் உரைத்தொடர் விரி ஒருவன் வெகுளி நீங்கான் எஞ்ஞான்றும் நிறையிலன் அவனை வெல்லுதல் யாங்கணும் யார்க்கும் "எளிது என்று அமையும். இந்தத் தொடரில் அவனை வெல்லுதல் என்பது வருவித்து உரைக்கப்பட்டது. இந்தச் சூழலில் இவ்வாறு எழுவாயைக் (அவனை வெல்லுதல்) கரந்து மொழிவது தமிழ்த் தொடரியலில் மிகவும் புதுமையானது. அவன் பகை யார்க்கும் எளிது எனக் கொள்ளினும் எழுவாய் கரந்து நிற்றல் காண்க.

"வழிநோக்கான்; வாய்ப்பன செய்யான்; பழிநோக்கான்
பண்பிலன்; பற்றார்க்கு இனிது".

இந்தக் குறளின் உரைநடையாக்கம் வழிநோக்கான்; வாய்ப்பன செய்யான் பழிநோக்கான் பண்பிலன். பற்றார்க்கு இனிது என அமையும். பொருள் விளக்கத்துக்கு மேலும் தொடரை விரித்துரைக்கும்போது ஒருவன் வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான் பண்பிலன் அவனுடைய பகை பற்றார்க்கு இனிது என அமையும். இங்கே அவனுடைய பகை என்ற தொடர் இனிது என்ற பயனிலைக்கு எழுவாயாக வருவித்து உரைக்கப்பட்டது. இப்படி இத்தகைய சூழலில் எழுவாய்த்தொடரை வருவித்து உரைப்பது தமிழ்த் தொடரியலுக்குப் புதுமையானது.

"பகை என்னும் பண்பிலதனை ஒருவன்
நகையேயும் வேண்டற் பாற்றன்று".

இந்தக் குறள் தொடரமைப்பில் மிகவும் சிக்கலானது. இதை உரைநடையாக்கம் செய்யும்போது அது பகை என்னும் பண்பிலதனை ஒருவன் நகையேயும் வேண்டற்பாற்று அன்று என அமையும். பண்பிலாத ஒன்றை ஒருவன் வேண்டற்பாலது அல்லன் என்றிருந்தால் குழப்பம் இல்லை. இந்தச் சிக்கலைப் பரிமேலழகர் மிக நன்றாகக் கவனித்திருக்கிறார். வேண்டற்பாற்று அன்று என்ற பயனிலைக்கு ஏற்ப நீதிநூல் என்று எழுவாயை வருவித்து அவர் உரை கூறுகிறார். அவர் கருத்துப்படி இந்தக் குறளின் உரைத் தொடர்விரி பின்வருமாறு அமையும்.

நீதிநூல் பகை என்னும் பண்பிலதனை ஒருவன் நகையேயும் வேண்டும் பான்மையது அன்று. இங்கே நீதிநூல் என்ற எழுவாயை வருவித்து உரைத்தது நன்கு கவனிக்கத்தக்கது. இங்கே கரந்து நின்ற எழுவாய் அதுதானா? இப்படி ஐயத்துக்கு உரிய வகையில் வள்ளுவர் எழுவாயைக் கரந்து மொழிந்திருப்பாரா? இவை ஆராயத்தக்கன.

திருவள்ளுவப் பெருந்தகை மிகுந்த புலமை வாய்ந்தவர் என்பதும் அவருடைய எழுத்துக்கள் கருத்துச் செறிவும் சிந்தனைத் தெளிவும் உடையவை என்பதும் எல்லோரும் ஒப்பத்தக்க உண்மைகள். அவருடைய சொல்லாட்சியிலும் தொடரியல் முறையிலும் நாம் காணும் தனித்தன்மைகள் மேலும் வலிவாகவும்

ஆழமாகவும் ஆராயத்தக்கன. இப்படிப்பட்ட ஆராய்ச்சி திருவள்ளுவரின் திருவுள்ளத்தை உள்ளது உள்ளவாறு புரிந்துகொள்ள உறுதுணையாக அமையும். இத்தகைய ஆய்வுகள் இனித்தான் நிகழவேண்டும்.

குறிப்புகள்

1. நான் அவனைப் பார்த்து அவனோடு பேச விரும்புகிறேன் என்ற தொடரில் அவனோடு என்பது கரந்து நின்று அந்தத் தொடர் நான் அவனைப் பார்த்துப் பேச விரும்புகிறேன் என அமையலாம். உருபுகள் மறைந்து நிற்பது பற்றி நம் இலக்கணப் புலவர்கள் ஓரளவுக்கு ஆராய்ந்து விதியமைத்திருக்கிறார்கள். சொற்கள் மறைந்து நிற்பது பற்றி மொழியில் திட்டவட்டமாக அமைந்து கிடக்கும் விதிகளை இனித்தான் ஆராய்ந்து தெளிவாக விளக்க வேண்டும்.

2. பொதுவாக உரையாடலில் எழுவாய் கரந்து நிற்பது இயல்பு. இன்னார் இது செய்வர் இன்னார் இது செய்யார் என இரண்டு செய்திகளை உறழ்ந்து காட்டும்போது எழுவாய் மறைந்து நிற்றல் மிகவும் அரிது. மறைந்து நிற்பது இங்கே காணும் புதுமையாம்.

3. யாழ்கோடு என்பதை ஒரு தொகையாகக் கொண்டால் அது செவ்விது என்பதற்கு எழுவாயாகிப் பொருந்தும். அது தொகையாயின் யாழ்க்கோடு என ஒற்று மிக வேண்டும் என எதிர்பார்க்கிறோம். இந்தச் சிக்கல் மேலும் ஆராயத்தக்கது.

4. மொழியில் பயனிலை கரந்து நிற்றல் மிகமிக அரிது. இந்தக் குறளுக்கு வேறு விளக்கம் இருக்குமோ என்று கருத வேண்டியுள்ளது. ஆராயவேண்டும்.

தீபாவளியும் கார்த்திகையும் - ஒரு வரலாற்றுப் பார்வை

- முனைவர் *அ.தட்சிணாமூர்த்தி*

உண்ணும் உணவோடும், அவ்வுணவை உற்பத்தி செய்ய உதவும் மாடுகளோடும் உறவுடைய பொங்கல்விழா. இந்நாளில் எவ்வளவு ஆர்வத்தோடு கொண்டாடப்படுகிறது என்பதனை விளக்கத் தேவையில்லை. கதிரவன் திசைமாறும் நாளையே பொங்கல் என நாம் கொண்டாடுகிறோம். இதனை வடபுலத்தில் சங்கராந்தி என்று கொண்டாடுகிறார்கள். இன்று அது தமிழர்த் திருநாள் என்ற பெயரோடு தமிழகத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இத்தகு திருநாள் பற்றிப் பழைய தமிழ் இலக்கியங்களில் ஒரு குறிப்பும் இல்லை. இன்று புத்தாடைகளோடும், புதுப்புது இனிப்புப் பண்டங்களோடும் வெடிகளோடும், வாணவேடிக்கைகளோடும் தொடர்புடையதாகவும், கோடிக்கணக்கான பணம் புரளுதற்குரிய வணிகத்தை ஊக்குவிப்பதாகவும் கொண்டாடப்படும் தீபாவளியைப் பற்றித் தமிழில் காணக் கிடைக்கும் முதல் கல்வெட்டு, கி.பி. 1542 இல், அச்சுத தேவராயர் ஆட்சிக் காலத்தில் திருமலையில் பொறிக்கப்பட்டதே என அறிஞர் குடவாயில் பாலசுப்பிரமணியம் தெரிவிக்கிறார். தீபாவளியன்று பெருமாளுக்கு அதிரசம் நிவேதனமாக அளிக்க ஆணையிடுவதாக இக்கல்வெட்டு அமைந்தது. விசயநகர மன்னர் ஆட்சிக்கு முன்னர், தீபாவளி என்ற பெயரோடு எந்த விழாவும் தமிழ்நாட்டில் கொண்டாடப்படவில்லை. ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடிய அருட்பாடல்களிலும் அதுபற்றிக் குறிப்பில்லை. ஐப்பசியில் ஓண நாள் கொண்டாடப்பட்டதாகத் தமிழாகரர் திருஞானசம்பந்தர் தம் திருமயிலைப்பதிகத்தில் குறித்தார். கார்த்திகையில் விளக்கீட்டு விழா நடந்ததையும் குறித்தார். ஆனால் தீபாவளி என்ற பெயரில் ஒரு விழாவையும் குறிக்கவில்லை. ஓணம் என்பது திருமாலின் பிறந்தநாள். இது ஆவணியில் கொண்டாடும் விழா என்பர். இதனை மதுரைக்காஞ்சி (591) குறிப்பிடுகிறது. சைவர்கட்குரிய ஓண நாள் ஐப்பசியில் நடந்தது என்றறிகிறோம். திருப்பதியில் கிடைக்கும் கல்வெட்டுச் செய்தியைக் கொண்டு, 16ம்

நூற்றாண்டின் தொடக்கத்தில் தீபாவளி இங்குச் சிறப்பெய்திய நிலையை உணர முடிகிறது. தீபாவளியை வடநாட்டவர்க்குரிய பண்டிகையாகவே நாம் கருதி வருகிறோம். சீர்திருத்தக் கொள்கையுடையோர் தீபாவளியைக் கொண்டாடுவதில்லை. நரகாசுரன் திராவிட இனத்தவன் என்பது அவர்கள் கருத்து. ஆனால், நரகாசுரன் வதத்தோடு எந்தத் தொடர்பும் இல்லாமல், இதே பண்டிகை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர்த் தமிழ்மக்களால் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது என்ற உண்மையை அறிந்தால், அதனைத் தான் தமிழர்த் திருநாள் என்று கொண்டாடவேண்டும் என்ற எண்ணம் தோன்றும்.

இவ்வாண்டு தீபாவளிக்கு முதல்நாள் வெளிவந்த தினமணியில், 'தமிழ்மணி' என்ற பகுதியில், அகநானூற்றில் தீபாவளி' என்ற கட்டுரை வெளிவந்தது. அதன் ஆசிரியர் தமிழாகரர் தெ.முருகசாமி என்ற நல்ல தமிழறிஞர். அகநானூற்றின் 141 ஆம் செய்யுளில் கார்த்திகை விழாவைப் பற்றிய அரிய விளக்கம் அமைந்துள்ளது. அதனைத் தான் அவர் தீபாவளி என்று குறித்தார். தீபம்+ஆவளி தீபாவாளியாயிற்று. விளக்கு வரிசை என்பது இதன் பொருள். கார்த்திகை என்ற பெயர் கூட இல்லாத அகநானூற்றுக் குறிப்பில், மகளிர் முழு நிலவு நாளில் அறுமீன்கள் சேரும் நள்ளிரவில் விளக்குகளைத் தெருவெல்லாம் ஏற்றி, மாலைகளைத் தொங்கவிட்டு விழா நடத்தியதாகக் காணப்படுகிறது. எனவே இது தீபாவளிதானே! இதே நூலில் 17, 111, 185 ஆகிய செய்யுட்களிலும் இவ்விழாவைப் பற்றிய செய்திகள் உள்ளன. நற்றிணையின் 202 ஆம் பாடல், கார்த்திகையை அறம் செய் திங்கள் என்கிறது. இந்த விழாவோடு எந்தத் தெய்வமும் தொடர்புபடுத்தப்படவில்லை. தின்பண்டங்களோ, புத்தாடைகளோ சுட்டப்படவில்லை. பட்டாசு வெடித்தல் பற்றிய குறிப்பும் இல்லை. முழுக்க முழுக்க வானியல் தொடர்பான ஒரு நிகழ்ச்சியாகவே இது குறிக்கப்பட்டது. பொங்கலும் இத்தகையதே. கதிரவன் திசைமாறுவதுதானே பொங்கல் விழாவிற்கு அடிப்படை! தமிழ்ச் செய்யுட்களில் அறுமீன் என்ற குறிப்பு வருவதனால்தான் இப்பண்டிகை கார்த்திகையில் கொண்டாடப்படுவது என்ற முடிவுக்கு வருகிறோம். மேக மூட்டம் இல்லாத, மழை பெய்து அடங்கிய கலப்பைகட்கு வேலையில்லாத பருவமே கார்த்திகை விழாக் கொண்டாடப்பட்ட காலம். 'கார்த்திகைக்குப் பின் மழையில்லை' என்பது பழமொழியல்லவா?

இத்தோடு, கார்த்திகை என்ற விண்மீன் (நாள்) பெயரையும், அப்பெயர் உடைய கார்த்திகை என்ற மாதப்பெயரையும் பற்றிச் சிறிது கூறுவோம். தமிழின் மிகத் தொன்மையான நூல் தொல்காப்பியம். தொல்காப்பியச் சான்றோர், எழுத்ததிகாரப்பகுதியில் நாள் பெயரும், மாதப் பெயரும் நிலைமொழியாக இருக்கையில், வருமொழியோடு புணர்கிற நிலையை விளக்குகிறார். இதனை அவர் இகர ஈற்றிலும் ஐகார ஈற்றிலும், மகர ஈற்றிலும் (இது மெய்யெழுத்திற்கு மட்டும்) குறிக்கிறார். இன்று வழக்கிலுள்ள 12 மாதங்களின் பெயர்கள் இகரத்திலும் ஐகாரத்திலும் மட்டுமே முடிகின்றன. விண்மீன்கள் இருபத்தேழும் இகர, ஐகார, மகர ஈறுகளில் முடிகின்றன. இதனால் அறிவதாவது, இன்று வழக்கிலுள்ள மாதப் பெயர்களும், விண்மீன் பெயர்களும் தொல்காப்பியர் காலம் முதல் உள்ளவையென்பதே.

இனிச் சங்கச் செய்யுட்களில் இம்மாதப் பெயர்கள் இடம்பெறுகின்றனவா என்ற கேள்வி எழுகிறது. பன்னிரு திங்கட்பெயர்களும் இடம் பெறவில்லை. தை, மாசி, பங்குனி என்ற மூன்று மாதப் பெயர்களும் இடம் பெறுகின்றன. 'தைத்திங்கள்' (நற்.80) என்ற குறிப்பையும், 'தையூண் இருக்கை' (நற்.22) என்ற நோன்புப் பெயரையும் காண்க. மாசித்திங்கள் பற்றிப் பதிற்றுப்பத்தில் ஒரு குறிப்புண்டு. (பதிற்.59) அகநானூற்றின் 137 ஆம் செய்யுளில் உறையூரில், காவிரியின் நடுவே அமைந்த அரங்கத்தில் (இன்றையத் திருவரங்கம்தான்) பங்குனி முயக்கம் கொண்டாடப்பட்ட செய்தி இடம் பெறுகிறது. இதனை உத்திர நாள் விழாவெனவே உரையாசிரியர்கள் குறித்துள்ளனர்.

இந்த மூன்று திங்களும் சுட்டப்படுவதனால், அன்று 12 திங்கட்பெயர்களும் வழக்கில் இருந்தன என்ற முடிவேற்படுகிறது. இதனால், கார்த்திகை என்ற நட்சத்திரப் பெயரும், திங்கட்பெயரும் இந்நாளிலும் இத்திங்களில் கொண்டாடப்பட்ட விழாவும் (விளக்கேற்றும் விழா) பழந்தமிழர்க்குச் சிறப்பாக உரியவை என்ற முடிவேற்படுகிறது. சங்க இலக்கியத்தில், வேறு எந்த விழாவுக்கும் நான்கு சான்றுகள் இல்லை. வெறியாட்டுக்கு அடுத்த சிறப்புப் பெறுவது கார்த்திகை மட்டுமே. இதன் பெயர் விளக்கீடு என்பதனைத் தமிழாகரர் திருஞானசம்பந்தர் தாம் முதன்முதல் சுட்டுகிறார். இதனால், தீபாவளி என்ற வடமொழிப் பெயரும், விளக்கீடு என்ற தமிழ்ப்பெயரும் பொருளால் ஒன்றுபடுவதனைக் காணலாம்.

இனி, இப்பண்டிகைகள் கொண்டாடப்படும் திங்களைப்பற்றி எண்ணுவோம். ஐப்பசி மாதம் அமாவாசையை ஒட்டித் தீபாவளியும், கார்த்திகை மாதம் முழுநிலவை ஒட்டிக் கார்த்திகையும் கொண்டாடப்படுகின்றன. இதனை ஒரு வேற்றுமை என்று கணக்கிடக்கூடும். ஆனால், வடபுலத்தில், தீபாவளி கொண்டாடும் மாதத்தைக் கார்த்திகம் என்றே குறிக்கின்றனர். அஃதாவது அவர்கட்கு அது கார்த்திகை மாதம் என்பதே. எனவே ஒருவகையில் மாதத்தாலும் இரண்டு விழாக்களும் ஒன்றே எனக் கருத இடமேற்படுகிறது. இந்த ஒற்றுமையினை அறிஞர் அயோத்திதாசப் பண்டிதரே முதலில் காட்டினார் என்று அறிஞர் பாரதி வசந்தன் தம் தீபாவளி மலர்க் கட்டுரையில் சுட்டிக் காட்டியுள்ளார். வராகமிகிரரின் கணக்குப்படி, (சந்திரமானம்) தமிழ் மாதம் பிறப்பதற்குப் பதினைந்து அல்லது இருபது நாட்களுக்கு முன்பே சந்திரமான அடிப்படையிலான மாதம் பிறந்துவிடுகிறதாம். இதனால் கார்த்திகம் என்ற பெயரும், கார்த்திகை என்ற பெயரும் ஒன்றுபடக் காண்போம். அயோத்திராசரும், பாரதிவசந்தனும் சொல்வதிலுள்ள பொருத்தத்தினை, விசயநகர வேந்தர் காலத்தில் இத்தாலி நாட்டிலிருந்து விசயநகரம் வந்த நிக்கலோ டி கோண்டி என்பவரும் டோமிங்கோ பேயசு என்ற இன்னொரு ஆசிரியரும் தரும் தீபாவளி பற்றிய விளக்கத்தாலும் உறுதி செய்யலாம். இதற்கு உறுதுணையாக, பதினென்கீழ்க்கணக்கு நூற்களுள் ஒன்றான கார்நாற்பதில் உள்ள ஒருசான்றும் அமையக் காணலாம்.

நிக்கலோ டி கோண்டி என்பவர் தீபாவளிப் பண்டிகை நாளை வருடப்பிறப்பு நாள் என்று குறித்தார். டோமிங்கோவும் இதனை ஏற்றார். இவ்வறிஞர், இவ்விழா அக்டோபர் 12ல் நடந்ததாகக் குறிக்கிறார். நரகாசுரன் வரலாற்றோடு தொடர்புபடுத்தியதையும் இவர் சுட்டுகிறார். ஆண்களும், பெண்களும் வயதுவேறுபாடின்றி, ஆறு, குளம், கடல் ஆகியவற்றில் நீராடி, புத்தாடை புனைந்து தொடர்ந்து மூன்று நாட்கள் ஆடியும் பாடியும் களித்தனர் என்கின்றனர். தீபாவளி நாள் அமாவாசையாகும் என்பதனையும் சுட்டிக்காட்டும் பேயசு என்ற அறிஞர் அமாவாசையில் தொடங்கும் ஆண்டு, அமாவாசையிலேயே முடிந்தது என்கிறார். தமிழ்நாட்டில் தீபாவளி அமாவாசையை ஒட்டி ஐப்பசியில் கொண்டாடப்படுகிறது. ஆனால் வடவர் கருத்துப்படி கார்த்திகையில் கொண்டாடப்படுகிறது. இங்கே, வடவரின்

விளக்கீட்டு விழாவும் மூன்று நாள் கொண்டாடப்பட்டது என்பதனைக் குறித்துக் கொள்ளுங்கள். தமிழ்நூல்களுள் கார்த்திகை என்ற பெயரை முதன்முதலாகப் பதினென்கீழ்க்கணக்கு நூல்களுள் கார்நாற்பதிலும் களவழி நாற்பதிலும் காண்கிறோம். இவற்றில், கார்நாற்பதில் வரும் குறிப்பு மிகச் சிறப்பானது. தீபாவளியும், கார்த்திகையும் ஒன்றே என்று உறுதிசெய்யப்பெரிதும் உதவுவது. இந்த நூலின் ஆசிரியர், காடுகளில் தோன்றி மலர்கள் பேரளவில் பூத்துக் குலுங்குவதனை வருணிக்கையில், பின்வருமாறு கூறுகின்றார். "நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட தலைநாள் விளக்கின் தகையுடையவாகிப் புலமெல்லாம் பூத்தன தோன்றி" (26) தலைநாளாவது முதல்நாள் அல்லது தொடக்க நாளாகும். முதல்நாளில் ஏற்றிவைக்கப்பட்ட விளக்கு என்பதனால், மேலும் சில நாட்கள் அது கொண்டாடப்பட்டது என்பது வெளிப்படையாகும். அது எத்துணை நாள் கொண்டாடப்பட்டது என்று அது வெளிப்படக் கூறாவிட்டாலும், இன்றுள்ள நடைமுறையைப் பார்க்கையில், மூன்று நாட்கள் கொண்டாடப்பட்டது என்பது விளங்குகிறது. இன்று, மூன்றாம் நாள் கார்த்திகை, குப்பைக் கார்த்திகை எனப்படுகிறது. உழவுக்குப் பயன்படும் குப்பைமேடுகளில் விளக்கு ஏற்றுவது வழக்கமாகும். முதல்நாளில் மிகுதியான விளக்குகளை ஏற்றினர். அதனால்தான், தோன்றிமலர் மிகுதிக்கு அது உவமையாயிற்று. களவழி நாற்பது இதனை, "கழிவிளக்கு" என்கிறது. கழி என்னும் உரிச்சொல் மிகுதிப்பொருள் தருவதாகும். அடுத்தடுத்த நாளில் ஒரு சில விளக்குகள் மட்டும் ஏற்றப்பட்டன என்பது குறிப்பு.

நிக்கலோ டி கோண்டி தீபாவளியினை மூன்றுநாள் விழாவாகக் கூறுவதனை, நம் கார்த்திகைக் கொண்டாட்டத்தோடு ஒப்பிடும்போது, இரண்டு விழாவும் ஒன்றே என்ற முடிவுக்கு வருதலைத் தவிர்க்க முடியாது. தமிழ்மரபில், கார்த்திகை சைவத்தோடு (சிவனோடும் முருகனோடும்) தொடர்புடையது. வடபுலத்தில் கார்த்திகை விழா வைணவத்தோடு தொடர்புடையது. தமிழ்நாட்டுக் கார்த்திகையில் எண்ணெய் முழுக்கு, புத்தாடை, இனிப்பு முதலியன இல்லை. வடவர் மரபில் இவை தவிர்க்க முடியாதவை. பாரதி வசந்தன் கூறுவது போல், இவ்விழாவின்

ஆணிவேரை அறிஞர்கள் ஆய்ந்து கண்டறிய வேண்டும். முடிவு இது தமிழர்களின் முன்னோர்களிடமிருந்து உருவான பண்டிகை என்பதாக இருக்க முடியும்.

இனி, மகாராட்டிரத்தில் மகாபலி வாமன அவதாரத்தால் அடக்கப்பட்ட அல்லது முத்தியளிக்கப்பட்ட நாளாகக் கருதி மகாபலியின் உருவங்களை மகளிர் வழிபடுவதாகவும் அதுதான் தீபாவளி என்றும் அறிகிறோம். விஷ்ணுவின் இடத்தில் காளியை வைத்து வழிபடுவதாகவும் கூறுகின்றனர். இராமபிரான், இராவணனை அழித்து, சீதாப்பிராட்டியை மீட்டு, அயோத்திக்குத் திரும்பி வந்து முடிசூட்டிக் கொண்ட நாளே தீபாவளி நாள் என்ற கருத்தும் உண்டு. இவ்விவரங்களை, அறிஞர் T.V.மகாலிங்கம் எழுதிய Administration and Social Life Under Vijayanagar, Part II என்ற நூலின் இரண்டாம் பதிப்பு (1975) பக்கம் 241ல் காண்க.

இங்கு, மற்றொரு நல்ல கருத்தையும் எண்ணிப் பார்க்கலாம். வர்த்தமான மகாவீரர், தம்முடைய பாவாபுரி அரண்மனையில் இரவு முழுவதும் தம் மாணாக்கர்க்கு அறநெறிகளை எடுத்துரைத்தார் என்றும், பொழுது விடிவதற்குச் சற்று முன்பாக, வைகறையில் அவர் முக்திப்பேறு அடைந்தார் என்றும், அதுமுதலாக அவரைப் பின்பற்றியோர் அந்நாளை ஞானத்தின் அடையாளமான விளக்குகளை ஏற்றிக் கொண்டாடினர் என்றும், இன்றும், குசராத்தைச் சேர்ந்த மார்வாரிகள் இந்நாளில் தம் புதுக்கணக்கைத் தொடங்குவர் என்றும், அதுவே ஆண்டின் பிறப்பாகக் கொள்ளப்படுகிறது என்றும் அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி, சமணரும் தமிழும் என்ற தம் நூலில் குறித்துள்ளார்கள். இக்கருத்து, முன்னர்ச் சுட்டிய நிக்கலோ டி கோண்டி, பேயசு ஆகியோரின் கருத்தைத் தழுவியதாகவே தோன்றுகிறது. பாரதி வசந்தன் அறிஞர் அயோத்திதாசப் பண்டிதரின் கட்டுரையில், தீபாவளிக்கும், பௌத்தத்திற்கும் உள்ள உறவுக்கு ஒரு கதை சொல்லப்படுவதனையும் விளக்கியுள்ளார்.

மடலாபுரம் என்ற ஊரிலிருந்த பௌத்தர்கள் ஆமணக்கு விதைகளில் இருந்து எடுத்த நெய்யின் மருத்துவக் குணத்தை அறிந்தும், அது விளக்கு எரிக்கப்பயன்படுவதனை உணர்ந்தும், அதன் பயன்பாட்டைத் தம் மன்னரிடம் சொல்ல, அம்மன்னன் ஆமணக்குச் செடிகளைப் பயிரிடுமாறு மக்களுக்கு அறிவுறுத்தினான் என்றும், அண்ணாந்து என்னும் மலை உச்சியில் குழி தோண்டி, பருத்தி நூல் திரி வைத்து எரியவிட்டு, அது உயிர்களுக்குத் தீங்கு செய்யாது என்பதனை ஆராய்ந்து அறிந்து, மக்களைக்கூட்டி, ஆமணக்கு நெய்யை விளக்கெரிக்கப் பயன்படுத்துமாறு கட்டளை இட்டான் என்றும், அம்மக்கள் அதன் தீமை இன்மையை உறுதி செய்ய விரும்பி, மூன்று நாட்கள் வீட்டுக்கு வெளியில் திண்ணையிலும் தெரு மாடத்திலும் விளக்கு வைத்துப் பின்னர் வீட்டினுள்ளும் விளக்கெரித்தனர் என்றும் கூறியுள்ளார். எல்லாவற்றுக்கும் மேலாக, இது கார்த்துல தீபம் என்று அழைக்கப்பட்டதையும் கார்த்திகை மாதத்து முழுநிலவு நாளிலே தீபமேற்றி, பண்டை ஈகை அளித்துப் பகவத்தியானம் செய்தனர் என்றும் குறிப்பிடுகிறார். முழுநிலவோடு தொடர்புடையதாகச் சொல்லுவது, தமிழர் மரபை ஒட்டியுள்ளதைக் காண்க. இந்த வழக்கத்தையும், நற்றிணை 202 ஆம் செய்யுளில் வரும் 'அறம் செய் திங்கள்' என்ற தொடரையும் ஒப்பிட்டுக் காணலாம். அறச் செயல்களைத் தான் பௌத்தர்கள் ஈகை என்கின்றனர்.

இவை அனைத்தையும் எண்ணிப் பார்க்கையில், கார்த்திகை என்ற விளக்கீட்டு விழாவைச் சைவர், வைணவர், சமணர், பௌத்தர் என்கிற அனைவரும் தமக்கே உரிய வகையில் கொண்டாடி வருவதனை அறியலாம். இவ்வகையில் இது தேசிய விழாவாகும். இருள் தீமைக்கு அறிகுறி; ஒளி நன்மைக்கு அறிகுறி. உலகில் தீமைகள் அடியோடு நீங்கி எல்லோரும் இன்புற்றிருக்க நன்மைகள் பெருகவேண்டும் என்பதனையே இவ்விழா குறிக்கிறது என்று அறியவேண்டும். இப்பொழுது, அகநானூற்றின் 141ஆம் செய்யுளில் நக்கீரர் சொல்வதனை இந்தக் கருத்தோடு இணைத்துப் பார்க்கலாம்.

'மதிநிறைந்து அறுமீன் சேரும் அகல் இருள்நடுநாள் மறுகு விளக்குறுத்து மாலை தூக்கிப் பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய

விழவு". 'பலருடன் துவன்றி' என்ற குறிப்பில், ஊர்மக்கள் அனைவரும் கூடி நடத்திய விழா இதுவென்பது விளங்கும். இன்றும் தமிழகத்துச் சிற்றூர்களில் ஊர்ப்பொது விழாவாகவே இது கொண்டாடப்படுகிறது. ஊரின் நடுவிடத்தில் "சொக்கப்பனை" கொளுத்தப்படுகிறது. இதனைச் 'சுவர்க்கப்பனை' என்று விளக்கலாம். பனைமடல்களை ஒரு தேர்போலக் கட்டி அமைத்து, நல்ல நேரத்தில் அதற்குத் தீ மூட்டி வழிபடுவர். எஞ்சியுள்ள அம்மடல்களின் பகுதிகளை இல்லத்தில் வைத்துக் காப்பர். திருவண்ணாமலை தீபம் புகழ்மிக்கது. இறைவனை ஒளிவடிவமாக வணங்குதலை இது குறிக்கலாம். மறம் தொலைந்து அறம் வளர்தலையும், துன்பம் நீங்கி இன்பம் பிறத்தலையும், அறியாமை நீங்கி, அறிவு தலைக் காட்டுதலையும் இருளின் நீக்கமாகவும் ஒளியின் தோற்றமாகவும் அடையாளம் காட்டி இந்நாட்டு மக்கள் விழாவெடுத்தனர் என்று அறிகிறோம். பேரறிஞர் அயோத்தி தாசப் பண்டிதர் சொல்லும் கதையில் வரும் அண்ணாந்து மலை என்ற பெயர் திருவண்ணாமலையை நினைப்பிக்கிறது. மலை உச்சியில் தீபமேற்றியதாக அவர் குறிப்பிடுவதும் இதனை உறுதிப்படுத்துகிறது. எனவே, பௌத்த சமயத்தவரின் பழமரபுக் கதை கார்த்திகை விளக்கீட்டு விழா தமிழகத்தோடு தொடர்புடையதே என்பதனை உறுதிப்படுத்த மிகவும் துணைபுரிகின்றது.

பன்னெடுங்காலமாகத் தமிழர் கொண்டாடி வந்த விளக்கீட்டு விழாவோடு, கி.பி.15 ஆம் நூற்றாண்டளவில் தமிழ்நாட்டில் புகுந்த வடநாட்டு விளக்கீட்டு விழாவையும் சேர்த்துக் கொண்டாடும் நிலை தோன்றியுள்ளது. இரண்டும் வெவ்வேறு விழாக்களாகத் தோன்றினாலும், இரண்டும் ஒன்றே என்ற விளக்கம் நமக்குக் கிடைக்கிறது. இச்சிந்தனையைத் தூண்டிய அறிஞர் அயோத்தி தாசரையும், நல்ல நேரத்தில் இதனை நினைவூட்டிய பாரதி வசந்தனையும் பாராட்ட வேண்டும்.

இறுதியாக ஒரு கருத்தைக்கூறி இக்கட்டுரையை முடிக்கலாம். 'அகநானூற்றில் தீபாவளி' என்ற கட்டுரையின் ஆசிரியர், தம் மிகை ஆர்வத்தின் விளைவாக, அகம் 141ம் பாடலில் தலை தீபாவளியின் விதையைக் காட்ட முயன்றுள்ளார். இச்செய்யுளில், தன் காதலியைப் பிரிந்து பொருள் ஈட்டச் சென்ற தலைவன்

ஈட்டிவரத்தக்க செல்வத்தினை விளக்க ஓர் உவமையை நக்கீரர் பயன்படுத்தியுள்ளார். அப்பெரும் செல்வத்திற்குக் கரிகால்வளவனின் ஆட்சியில் உள்ள இடையாறு என்ற ஊரின் வளம் உவமையாக்கப்பட்டுள்ளது. அவ்வூரில், திருமணவீட்டில், புதுமணமகள் அவல் இடித்துப் பாலோடு சேர்த்து ஒரு சுவையான உணவைச் சமைக்கும் ஒருவகைச் சடங்கு இடம் பெறுகிறது. குறிப்பிட்ட ஊர்களோடு தொடர்புடைய இத்தகைய உவமைகள் அகநானூற்றில் பல உண்டு. பத்துப்பாட்டில் ஒன்றான பட்டினப்பாலை இந்த இலக்கிய மரபின் முதிர்ந்த நிலையைக் காட்டவல்லது. இதற்கும் கார்த்திகை விழாவுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. கதிர் முதிர்ந்து அறுவடை செய்யும் காலத்தில் (தைத்திங்கள்) நடந்தது இச்சடங்கு. கார்த்திகைத் திருவிழா நடவுப்பணிகள் முடிந்த அணிமைக் காலத்திற்குரியது. அயினிய என்ற சொல்லுக்கு உணவுப்பொருள்கள் நிறைந்த என்ற பொருளையே உரையாசிரியர் நாட்டாரும் கரந்தைக் கவியரசும் தருகின்றனர். பல கூட்டடுப்புச் சுட்டப்படுவதால் திருமண நிகழ்ச்சிக்காகப் பல அடுப்புகள் நிறுவப்பட்ட நிலையைச் சுட்டுகின்றார் நக்கீரர். மணப்பெண்ணின் தாய் வீட்டிற்கு மணமகன் வந்ததாகவும், அவனை உண்பிக்கச் சுவையான இனிப்பை மணமகள் செய்தாள் என்பதாகவும், அத்துடன் புத்தாடை வழங்கப்பட்டதாகக் கொள்ளலாம் என்பதாகவும் கட்டுரையாசிரியர் கூறுவது ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. இதில் இடம்பெற்றுள்ள அவலுணவு, முதன்முதலாக மணமகள், தன் கணவனுக்குப் பரிமாறுதற்காகச் சமைக்கப்பட்டது என்று கொள்ளலாம். திருமணம் முடிந்த நாளிலேயே மணமக்களைக் கூட்டி முதலிரவு நிகழ்ச்சியை நடத்திய தமிழர்கள், இச்சடங்கையும் நடத்தியிருக்க வேண்டும் என்று கருதவேண்டியுள்ளது. இக்கட்டுரைச் செய்திகள் மேலும் ஆயத்தக்கனவே.

சங்ககாலப் பலகணி

முனைவர் அ.அறிவொளி

சங்க இலக்கியம் தான் தமிழர்களின் கூனித்த எழுத்துச் சான்றுகள். இக்காலத்தில் சிலர் சங்க இலக்கியங்கள் கடவுள் மறுப்புக் கொள்கை கொண்டது போல் பேசுகின்றனர். ஆகவே ஒரு பலகணி வழியாக அதைப் பார்ப்போம். சங்க இலக்கியத்தில் சிவன், திருமால், முருகன், சிவசக்தி முதலிய தெய்வங்கள் பாராட்டப்படுகின்றன. எட்டுத்தொகை நூல்களாகிய சங்கப் பாடல்களில் கடவுள் வாழ்த்து என்ற முதல்பகுதி இணைக்கப் பெற்றுள்ளது.

வேதம், வேதியர், யாகம் முதலியன விவரிக்கப்படுகின்றன. பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி என்றே ஒரு பாண்டியன் சிறந்து விளங்கியுள்ளார்.

வானத்தின் ஆராய்ச்சியோடு ஒன்பது கிரகங்களின் ஆளுகைக்கு மனித வாழ்வு உட்பட்டது என்றும் நம்பினர்.

இராமாயணம், மகாபாரதம் முதலிய இதிகாசக் கதைகள் பற்றிய குறிப்புகள் அங்கங்கே காட்டப்படுகின்றன. சமூகம் நால்வகைக் குலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

சமயங்கள் தமக்குள் பிணக்கு இல்லாமல் நல்லிணக்கம் கொண்டு விளங்கின.

வறுமை தவிர்க்க முடியாதது ஆகையால் அறவழியில் வள்ளல்கள் பலர் வாழ்ந்தனர். அரசன் செங்கோல் செலுத்தி மக்களைக் காத்தான்.

புலவர்கள் என்னும் அறிவாளர்கள் அரசர்களுக்கு அமைச்சர் போல் அறிவுரை வழங்கினர். ஓரிரு தவறான அரசர்கள் தவறாக ஆட்சி செய்தபோதும் புலவர்கள் அரசர்கள் திருந்துமாறு செயல்பட்டனர்.

சிற்றூர்களில் பஞ்சாயத்துமுறை தேர்தல் நடந்து வந்தது. ஒரு சமூகம் எப்படி இருக்க வேண்டும் என்று எடுத்துக்காட்டாக சங்ககாலம் இருந்தது.

இந்தியா முழுதும் பொதுமக்கள் யாத்திரை அளவில் சென்றுவரத் தடை இல்லை. தமிழகம் போன்ற சிறந்த சமூகமும் அரசியலும் இலக்கியமும் இந்தியாவின் பிறமாநிலங்களில் இருந்தற்குச் சான்று வளமாக இல்லை.

சோழர், சேரர், பாண்டியர் என்ற மூவேந்தர் வடநாட்டிலும், கடல்மீதும் அடிக்கடி படை நடத்தி வெற்றி பெற்றுள்ளார்கள். எந்த ஒரு பகுதியையும் பலாத்கார சர்வாதிகார ஆட்சியில் தமிழ் மன்னர்கள் ஈடுபடுத்தவில்லை.

சுருக்கமாகச் சங்ககாலம் தலைசிறந்த நாகரிகம் கொண்ட ஒரு காலம்தான். அது கடவுள் மறுப்புக் கொள்கையோ சாதி பேதமோ கொண்டிருக்கவில்லை என்பதே பலகணி மூலம் காணும் காட்சியாகும்.

கற்கை நன்றே

"பைந்தமிழ் ஊறிவரும்; பால்தரும் பசுபோல
பாவலர் தரும் செம்மைமொழி பாண்டித்துரைச் சங்கத்திலே!
பன்னிரண்டு உயிரிணைந்து பதினெட்டு மெய்யில் கூடி
பண்பு, அன்பு, ஒழுக்கமியும்; பழம்சங்கப் பாட்டினிலே!
கண்ணிரண்டு கருத்துள்வரை முன்னோர்தந்த பனுவலை
யெலாம்
கற்றுபிறர்க் கும்உரைத்து கரையவேண்டும் ஞாலத்திலே!"

கணபதி பிச்சை
மதுரை

பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ. எம்.ஃபில்.,
செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.
தொலைபேசி : (0452) 6575615

அச்சிடுவோர் : தனம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1.

தொடர்பு முகவரி :
ஆசிரியர், செந்தமிழ்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை–625001.
தொலைபேசி : 0452-6575615

RNI Regd. No.: 5508/56 May 2009

ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா

அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 625001.
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by **Davam Printers**, published by **R.ALAGUMALAI** on behalf of **Madurai Tamil Sangam, Madurai** and printed at **32, West masi Street, Madurai-1**, and published at **54, Tamilsangam road, Madurai**. Editor **R. ALAGUMALAI**